# உணர்வூட்டும் உபதேசங்கள்

பக்கம்


1. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அருளிய உபதேசங்கள் 7
2. செல்வத்தைவிட கல்வி சிறந்ததேன்? 9
3. சொர்க்கத்தின் தலைவாசலிலே! 10
4. கண்ணியப்படுத்துங்கள் 13
5. மனிதனை புனிதனாக்கும் மாபெரும் பன்னிரண்டு விஷயங்கள் 14
6. தித்திக்கும் தேன்மொழிகள் 16
7. நல்லோரின் இலட்சணங்கள் 17
8. தீயோரின் இலட்சணங்கள் 19
9. நாலாயிரம் வருடங்களில் நான் பெற்ற எட்டு அனுபவங்கள் 20
10. இறை அச்சத்தின் அடையாளங்கள் 21
11. நான்கு வினாக்களின் விடைகள் 22
12. தினந்தோறும் மண்ணறை விண்ணப்பிக்கிறது 23
13. ஏ–தாவூதே! ஞானோபதேசம் பெறுவீராக!! 25
14. பள்ளியின் (மஸ்ஜிதின்) ஒழுக்கங்கள் 26
15. ஷைத்தானின் நண்பர்கள் 27
16. ஷைத்தானின் விரோதிகள் 28
17. அல்லாஹ்வின் விரோதிகள் 29
18. இறைவன் மூஸா (அலை) அவர்களை நோக்கி! 32
19. ஹதீது குத்ஸியிலே! 33

20. அதிகமான சிந்தனை செய்யுங்கள் 34
21. ஈமானால் சிறந்தவர் யார்? 35
22. மறுமையில் நிகழும் ஒரு சம்பவம் 36
23. பெரும் பாவமான காரியங்கள் 38
24. மாதூய எண்ணத்தின் மாபெரும் சக்தி 44
25. ஆபத்துக்கள் இறங்கிவிடும் 48
26. அல்லாஹ்வின் அர்ஷின் நிழலை அடைவோர் 48
27. ஒவ்வொரு மூச்சுக்கும் இரு கேள்விகள் உண்டு 51
28. எட்டு சொர்க்கமும் ஏழு நரகமும் யார் யாருக்கு? 52
29. பிரார்த்தனை ஏற்கப்படும் நாட்களும் இரவுகளும், இடங்களும் 54
30. பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவோர் 55
31. பிஸ்மில்லாஹ்வின் அற்புத சக்தி 56
32. இப்படி ஒரு காலம் வரும் அந்தக்காலத்திலே 59
33. நன்றி கெட்டால் நாசமேவிளையும்! 61
34. தவ்ராத்வேதத்திலே! 64
35. பற்பல பாவிகளுக்குப் பலவிதமான வேதனைகள் 66
36. நபி (ஸல்) அவர்கள் நரகில் கண்ட நங்கையர்கள் 68
37. உணர்வூட்டும் ஒரு நிகழ்ச்சி 71
38. ஸூர் ஊதப்படும் நாளையிலே! 74
39. உண்ணல் குடித்தலின் ஒழுக்கங்கள் 76
40. நமது பிரார்த்தனை அங்கீகரிக்கப்படாததேன்? 79

بسم الله الرحمن الرحيم

# 1. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அருளிய அரிய உபதேசங்கள்

1. ஏ அலீயே! நீர் காலையிலும், மாலையிலும் இஷாத் தொழுகைக்கு முன்னும், இருள் சூழ்ந்த இல்லத்திலும் தூங்காதீர்.
2. உலோபிகளின் மத்தியில் உட்காராதீர்
3. உட்கார்ந்திருப்போருக்கிடையில் உறங்காதீர்.
4. இடது கரத்தால், உண்ணவும், குடிக்கவும் செய்யாதீர்
5. கன்னத்தில் கைவைத்து உட்காராதீர்
6. பற்களைக் குத்தி அதிலுள்ளவற்றை உட்கொள்ளாதீர்.
7. விரல்களை நெட்டி (சொடக்கு) விடாதீர்.
8. இரவில் கண்ணாடி பார்க்காதீர்
9. தொழுகையிலிருக்கும்போது வானத்தை நோக்காதீர்
10. மலம், ஜலத்தில் எச்சில் உமிழாதீர்
11. உணவுப்பொருள், எலும்பு, அடுப்புக்கரி, கண்ணாடித் துண்டு முதலியவைகளால் துப்புரவு செய்யாதீர்
12. உட்கார்ந்துகொண்டு தலைப்பாகை அணியாதீர்
13. நின்றவண்ணம் கால்சட்டையை அணியாதீர்.
14. கடினமான பொருட்களைப் பல்லால் கடிக்காதீர்

. உணவு உண்டு கை அலம்பாமல் உறங்காதீர்

16. சூடான ஆகாரத்திலும், சுடுதண்ணீரிலும் சுஜூதின் இடத்திலும் வாயால் ஊதாதீர்

17. பிறரின் குற்றங்குறைகளைத் தேடித்திரியாதீர்
18. பாங்கு இகாமத்திற்கிடையில் பேசிக்கொண்டிராதீர்.
19. மலம், ஜலம் கழிக்கும்போது பேசாதீர்
20. உமது நேயர்களை வெறுக்கவும், அவர்களைப் பற்றி கோள் சொல்லவும் செய்யாதீர்
21. அண்டை வீட்டாரைத் துன்புறுத்தாதீர்
22. எவரையும் இழிவாகவோ, தாழ்வாகவோ பேசாதீர்
23. நடக்கும்போது திரும்பித் திரும்பிப் பாராதீர்
24. பூமி அதிரும்படி நடவாதீர்
25. நண்பர்களின் மீது சந்தேகங்கொள்ளாதீர்
26. எந்நிலையிலும் உண்மையைத் தவிர்த்துப் பேசாதீர்
27. ஆகாரத்தை நுகர்ந்து பார்க்காதீர்
28. எதையும் பேசும்போது பிறர் புரியும்படி விளக்கிப் பேசுவீராக
29. விலக்கலானவற்றை நோக்காதிருப்பீராக
30. பிறரின் அழைப்பிற்குப் பதில் கொடுப்பீராக
31. தனித்துப் பிரயாணம் செய்யாதீர்
32. அனாதைகளுக்கு அநீதம் செய்யாதீர்
33. உமது அறிவையே நம்பி எதையும் செய்யாமல் உம்மைக் காட்டிலும் சிறந்தோரிடம் ஆலோசனை பெற்றுச் செய்வீராக
34. அகம்பாவம், ஆணவம் கொள்ளாதிருப்பீராக
35. உமது உணவைப் பற்றி கவலை கொள்ளாதீர்
36. பகைவர்களை எளிதில் நம்பிவிடாதீர்
37. பெருமை பாராட்டாதீர்
38. பேராசைப்படாதீர்
39. யாசிப்போரை விரட்டாதீர்.
40. விருந்தினரை உள்ளன்புடன் உபசரிப்பீராக.



41. கஷ்டம் வந்தபின் பொறுமை கொள்வீராக.
42. நன்மைகளை புரிவதன் பக்கம் பிறரைத் தூண்டுவீராக.
43. நன்மைகளை ஏவித் தீமைகளைத் தடுப்பீராக.
44. உமது குற்றங்குறைகளை நினைத்து வருந்துவீராக
45. உமக்கு தீங்கு செய்தோருக்கும் நன்மையே செய்வீராக.
46. உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவீராக.
47. அதிகமாக நித்திரை செய்யாதீர். அதனால் இதயம் மரித்து விடுவதோடு கை சேதமும் உண்டாகும்.
48. அனுதினமும் நூறு முறை பாவமன்னிப்புத் தேடிக் கொள்வீராக.
49. இருளான இடத்தில் உட்கார்ந்து உணவு உட்கொள்ளாதீர்.
50. ஆகாரத்தை வாய் நிறைய வைத்து உண்ணாதீர்.

*(வஸிய்யத்துன்னபீ—லி—ஸய்யிதினா அலீ)*

## 2. செல்வத்தைவிட கல்வி சிறந்ததேன்?

1. கல்வி நபிமார்களிடமிருந்து பெற்ற வாரிசுச் சொத்தாகும். செல்வம் பணக்காரர்களிடமிருந்து பெற்ற வாரிசுச் சொத்தாகும்.
2. கல்வியைச் செலவு செய்தால் குறையாது. செல்வம் செலவு செய்தால் குறைந்து விடும்.
3. கல்வி, கற்றவர்களைப் பாதுகாக்கும், ஆனால் செல்வம் அதைப் பாதுகாப்பதன் பக்கம் தேவைப்படும்.
4. கல்வி கற்றவர்களுடன் கப்றினுள் செல்லும், ஆனால் செல்வம் செல்வந்தர் மரணமானபின் உலகிலேயே தங்கி விடும்.

5. தெய்வீகக் கல்வி விசுவாசிகளுக்குத்தான் கிடைக்கும். ஆனால், செல்வம் விசுவாசிகளுக்கும், நிராகரிப்போருக்கும் கிடைக்கும்.
6. கற்றவர்களிடம் எல்லா மக்களும் தேவையாவார்கள்; ஆனால் செல்வந்தர்களிடம் அவசியமுள்ளவர்கள் மட்டும் தேவைப்படுவார்கள்.
7. கல்வி ஸிராத்துல் முஸ்தக்கீம் பாலத்தில் நடந்து செல்ல கற்றவர்களுக்கு ஊக்கமளிக்கும். ஆனால் செல்வமோ அதில் நடந்து செல்லச் செல்வந்தர்களுக்குத் தடையாக இருக்கும். *(ரவ்னகுல் மஜாலிஸ்)*

## 3. சொர்க்கத்தின் தலைவாசலிலே

மறுமையில் சொர்க்கத்தின் தலைவாசலுக்கருகில் நான்கு வகையினர் எவ்விதக் கேள்வி கணக்கும் தண்டனையுமில்லாமல் கொண்டுவரப்படுவார்கள்.

1. ஹஜ்ஜை முறிக்கும் காரியங்களைச் செய்யாமல் பூரணமாக ஹஜ்ஜை நிறைவேற்றிய ஹாஜி.
2. கற்றபடி நடந்தொழுகிய ஆலிம்.
3. ஜிஹாத் அறப்போரிலே உயிர் நீத்த ஷஹீத் (வீரத்தியாகி)
4. ஹலாலான முறையில் பொருளைச் சம்பாதித்து அதை எவ்வித பெருமையுமின்றி அல்லாஹ்வின் பாதையிலே செலவு செய்த கொடையாளி

இந்த நால்வரும் முதலில் தாமே சொர்க்கத்தில் புகவேண்டுமென்று விரும்பித் தர்க்கித்துக் கொள்வார்கள். அப்போது இறைவன் அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பளிப்பதற்காக ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களை அனுப்பி வைப்பான்.

அதன்படி ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அந்த நால்வர்களிடமும் வந்து முதலில் ஷஹீதிடம் "நீர் முதன்முதலில் சொர்க்கத்தில் புக விரும்புகிறீரே அப்படி என்ன அமல் செய்தீர்?" என்று கேட்பார்கள். அதற்கவர் நான் இறைவனின் பொருத்தத்தையும், திருப்தியையும் நாடிப் போர்க்களம் சென்று எதிரிகளுடன் போர் புரிந்து இறைவனுக்காக என் உயிரையே தியாகம் செய்தேன் என்றுரைப்பார். அப்போது ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஷஹீதுக்குரிய பலாபலன்களையும், சிறப்பையும் நீர் எவ்வாறு அறிந்தீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் நான் அதை ஆலிம்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்பார்.



அப்படியானால் ஆலிமாகிறவர் உனக்கு உஸ்தாது ஆகிறார். ஆசிரியருக்கு முந்திச் செல்வது ஒழுக்கமல்ல, மரியாதையும் அல்ல; மரியாதைப் பேணி ஒதுங்கி நில் என்று ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறுவார்கள்.

பின்பு ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஹாஜியை நோக்கி நீர் முதலில் சொர்க்கத்தில் நுழையப் பிரியப்படுகிறீரே! அப்படி என்ன நற்கிரியை புரிந்தீர்? எனக்கேட்பார்கள். அதற்கவர் நான் அல்லாஹ்வின் உத்தரவுப்படிப் பொருள் நஷ்டத்தையும் உடல் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் 'கஃபத்துல்லாஹ்' சென்று ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றினேன் என்பார். அப்போது ஹஜ்ஜுச் செய்வது கடமை என்பதையும் அதற்குரிய நன்மைகளையும் எவ்வாறு அறிந்து கொண்டீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் நான் ஆலிம்களிடம் கேட்டுத்தெரிந்துக் கொண்டேன் என்பார். அப்படியானால் ஆலிமாகிறவர் உனக்கு ஆசானாகிவிட்டார். ஆதலால் உனது ஆசானுக்கு முந்துவது ஒழுங்குமல்ல, மரியாதையுமல்ல. எனவே மரியாதையைப் பேணி ஒதுங்கி நில்! எனக்கூறுவார்கள்.

பின்பு ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கொடையாளியை நோக்கி நீர் முதலில் சொர்க்கத்தில் புக நாடுகிறீரே! அப்படி என்ன நற்கிரியை புரிந்தீர்? என்று

கேட்பார்கள். அதற்கவர் நான் ஹலாலான (ஆகுமான) முறையில் பொருளைச் சம்பாதித்து அதை அல்லாஹ்வின் பாதையிலேயே அவனின் திருப்தியை நாடி அவனுக்குப் பொருத்தமான, அவன் வழியிலேயே செலவு செய்தேன் என்றுரைப்பார். அதற்கு ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அவ்வாறு செலவு செய்வதன் நன்மைகளை யாரிடம் அறிந்தீர்? எனக் கேட்பார்கள். அப்போது அவர் ஆலிம்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்பார். அப்பொழுது ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அப்படியானால் ஆலிமாகிறவர் உனக்கு ஆசானாகிவிட்டார். ஆசானுக்கு முந்துவது மரியாதையல்ல. ஆதலால் மரியாதையைப் பேணி ஒதுங்கி நில்! என்றுரைப்பார்கள்.

இந்நிகழ்ச்சிகளைக் கண்ணுற்று கொண்டிருந்த ஆலி மாகிறவர், இறைவா! நான் கொடையாளியின் தர்மத்தாலும், உபகாரத்தாலுமே உனது தீனுடைய கல்வியை கற்று ஆலிமானேன். ஆதலால் கொடையாளி முதலில் சொர்க்கத்தில் நுழைய அனுமதிப்பாயாக என்று (ஷபாஅத்) மன்றாடு வார்கள். அப்போது இறைவன் சொர்க்கத்தின் காவலரை நோக்கி, ஏ ரிள்வானே! ஆலிமாகிறவர் உண்மையே சொல்கிறார். ஆதலால் சொர்க்கத்தின் வாயிலைத் திறந்து முதலில் கொடையாளியை அதில் நுழையச் செய்வீராக! என்று உத்தரவிடுவான். அதன்படி முதலில் கொடையாளியும் மற்றவர்கள் அவருக்குப் பின்னும் சொர்க்கத்தில் புகுவார்கள்.

மறுமையில் நபிமார்கள் அதற்கடுத்தபடி உலமாக்கள் அதன்பின் ஷுஹதாக்கள் ஆகிய மூவர்க்கத்தினரும் அவர்கள் நாடியவர்களுக்கு இறைவனிடம் "ஷபாஅத்" செய்வார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

இந்த ஹதீதின்படி, உலமாக்களுடைய ஷபாஅத்தால் கொடையாளி முதலில் சொர்க்கத்தில் புகுவார் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா? *– துர்ரதுல் வாயிளீன்*



# 4. கண்ணியப்படுத்துங்கள்

உலமாக்களை கண்ணியப்படுத்துங்கள். ஏனெனில் அவர்கள் நபிமார்களின் வாரிசுக்காரர்களாக இருக்கிறார்கள். எனவே, எவர்கள் உலமாக்களைக் கண்ணியப்படுத்துகிறார் களோ, அவர்கள் உண்மையில் அல்லாஹ்வை கண்ணியப் படுத்தியவர்களாவார்கள். எவர் ஒருவர் ஆலிமைக் கண்ணியப் படுத்துகின்றாரோ அவர் உண்மையில் எழுபது நபிமார்களைக் கண்ணியப்படுத்தியவரைப் போலாவார். எவர் மார்க்கக் கலை பயிலும் ஒரு மாணவரைக் கண்ணியப்படுத்துகின்றாரோ அவர் எழுபது வீரத் தியாகிகளைக் கண்ணியப்படுத்தியவரைப் போலாவார். எவர் மார்க்கக் கல்வியையும், கல்விமான் களையும் நேசிக்கிறாரோ அவருடைய ஜீவிய காலத்திலேற்படும் சிறு பாவங்கள் பட்டோலையில் எழுதப்படமாட்டாது.

ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் "நீங்கள் உலமாக்களைக் கண்ணியப்படுத்துங்கள். ஏனெனில் அவர்கள் இறைவனிடம் கண்ணியவான்களாக இருக்கிறார்கள். எவர் உலமாக்களை கண்ணியப்படுத்துகிறாரோ அவர் அல்லாஹ்வை கண்ணியப் படுத்தியவராவார். எவர் அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்து கிறாரோ அவரின் இருப்பிடம் சுவனமாகும் என்று கூறினார்கள். *– ஹதீஸ்*

உலமாக்கள் இல்லாவிடில் மக்களெல்லாம் மாக்களாகி விடுவார்கள். ஆனால் உலமாக்கள் மக்களை மாக்கள் தன்மையை விட்டும் மனிதத் தன்மைக்குக் கொண்டு வருகிறார்கள். *– ஹதீஸ்*

எனவே உலமாக்களைக் கண்ணியப்படுத்துவதும், அவர்களின் சொற்களுக்குச் செவிமடுப்பதும் அவசியமாக இருக்கிறது என்பதை மேற்குறித்த பொன்மொழிகள் தெளிவாக்குகிறதல்லவா? *– துர்ரதுல் வாயிளீன்*

# 5. மனிதனைப் புனிதனாக்கும் மாபெரும் பன்னிரண்டு விஷயங்கள்

ஹஜ்ரத் கஃபுல் அஹ்பார் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அதாவது: நான் தவ்றாத், ஜபூர், இன்ஜீல், குர்ஆன் ஷரீப் ஆகிய நான்கு வான்மறைகளையும் கற்றுணர்ந்திருக்கிறேன்; ஆயினும் அவைகளிலிருந்தும் பன்னிரண்டு விஷயங்களையே பொறுக்கி எடுத்து அவைகளை ஒரு காகிதத்தில் எழுதி என் கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டு அனுதினமும் அவ்விஷயங்களை காலை, மதியம், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் மும்முறை நோட்டமிட்டு என்னைத் திருத்திக் கொள்வேன். அவைகள்:—

1. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! எனது பொக்கிஷம் நிறைந்திருக்கும்வரை உனக்குரிய உணவு கிடைக்காமல் தப்பி விடும் என்று பயப்படாதே, நிச்சயமாக எனது பொக்கிஷம் ஒரு போதும் குறையவே குறையாது.

2. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! உனது தகுதி (நன்மை)க்குத் தக்கவாறு உன்னை நான் நேசிக்கிறேன்; எனது தகுதிக்கு தக்கவாறு நீ என்னை நேசி.

3. அல்லாஹ் கூறுகின்றான்: — ஆதமின் மகனே! நீ ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தைக் கடந்து சென்று உனது இருபாதங்களையும் சொர்க்கத்தில் காணும்வரை எனது சூழ்ச்சியைப் பற்றி நிம்மதியாக இருந்திடாதே.

4. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! உலகிலுள்ள சகல சிருஷ்டிகளையும் உனது பிரயோஜனத் திற்காகவே படைத்திருக்கின்றேன், ஆனால் என்னை வணங்கவே நான் உன்னைப் படைத்திருக்கின்றேன்.



5. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! எனது திறமையும் வல்லமையும் நிரந்தரமாக இருக்கும் காலமெல்லாம் என்னைத் தவிர்த்து வேறு எவருக்கும் நீ பயப்படாதே.

6. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! உனது தவறினாலும் குற்றத்தினாலும் ஏற்படும் தீமைக்காக நீ என்மீது கோபமும் வெறுப்பும் கொள்ளாதே! நீ எனக்கு மாறு செய்த குற்றத்தினாலும் தவறினாலுமே அத்தீமைகள் நிகழ்ந்தன வென்று உணர்ந்து உன்னையே நீ கோபித்துக்கொள்.

7. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! அர்ஷுக்கு அப்பாலிருந்து, பாதாளம் வரையிலுள்ள அனைவரும் என்னையே நாடுகிறார்கள். ஆனால் நான், உன்னை நாடுகிறேன். எனினும் நீ என்னை விட்டும் உனது தீய செயலால் வெகுதூரம் வெருண்டோடுகின்றாய்!

8. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! நீ என்னைத் தவிர எப்பொருளையும் நேசிக்காதே. ஏனெனில் அவைகள் உனக்குத் தக்க சந்தர்ப்பத்தில் பயன்தராது. என்னை நீ எப்பொழுது நாடுகிறாயோ. அப்பொழுதே எனது உதவியைப் பெற்றுக்கொள்வாய்.

9. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! நாளைய தினத்தின் உணவை இன்றே நீ என்னிடம் கேட்காதே. ஏனெனில் நாளைய தினத்தின் அமலை இன்றே நான் உன்னிடம் கேட்பதில்லை.

10. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! உன்னை நான் அற்ப விந்துவிலிருந்து படைத்தேன். நீ உனது தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போது கூட உனக்குத் தேவையான உணவை நான் கொடுத்தருளினேன். அதில் கொஞ்சங்கூட நான் குறைக்கவில்லை.

11. அல்லாஹ் கூறுகின்றான்:— ஆதமின் மகனே! உனக்காக நான் பங்கிட்டுக் கொடுத்த செல்வத்தைக் கொண்டு

நீ திருப்தி அடைவாயானால், உன் உடலையும் உள்ளத்தையும் நான் சுகம் பெறச் செய்வேன். நீ திருப்தி கொள்ள வில்லையானால், காடு வனாந்திரங்களில் காட்டு மிருகங்கள் தனது உணவைத் தேடியலைவதுபோல் உன்னையும் அலையச் செய்திடுவேன். அவ்வாறு நீ அலைந்து திரிந்தாலும், எனது கண்ணியத்தின் மீது ஆணையாக நான் உனக்கு நிர்ணயித்ததைத்தான் நீ அடைய முடியும். மேலும், நீ என்னிடத்திலும், மக்களிடத்திலும் வெறுக்கப்பட்டவனாவாய்.

12. அல்லாஹ் கூறுகிறான்:— ஆதமின் மகனே! எவர் எனது தீர்ப்பையும் விதியையும் பொருந்திக் கொள்ள வில்லையோ எனது சோதனையின் மீது சாதனை காட்டிப் பொறுமை கொள்ளவில்லையோ எனது உபகாரத்திற்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் எனது வானப் பரப்பின் கீழிலிருந்து வெளியேறிக்கொள்ளட்டும். என்னையல்லாத வேறு இறைவனையும் தேடிக்கொள்ளட்டும்.

## 6. தித்திக்கும் தேன்மொழிகள்

1. அனைத்திலும் ஆன்மாவிற்குச் சாந்தியும், புத்துயிரும் அளிப்பது இறை நாமத்தை ஜபிப்பதேயாகும்.
2. அனைத்திலும் அதிக அன்பிற்குரியவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களேயாவார்கள்.
3. அனைத்திலும் நல்லுபதேசி மனச் சாட்சியேயாகும்.
4. அனைத்திலும் நல்ல மருந்து நன்னம்பிக்கையேயாகும்.
5. அனைத்திலும் அதிகக் கஷ்டம் தரக்கூடியது கடனேயாகும்.
6. அனைத்திலும் பெரும்பாக்கியமும், சந்தோஷமும் தருவது நோயற்ற வாழ்வேயாகும்.
7. அனைத்திலும் நல்லது உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்வதேயாகும்.



8. அனைத்திலும் கூடாத காரியம் கோபமேயாகும்.
9. அனைத்திலும் நற்பெயர் தருவது கொடை கொடுப்பதேயாகும்.
10. அனைத்திலும் அழியாப் பெருஞ்செல்வம் கல்வியேயாகும்.
11. அனைத்திலும் அதிகச் சக்தி வாய்ந்தது இனிய பேச்சும் இரக்கமும் ஆகும்.
12. அனைவரிலும் பெரிய வீரன் கோபத்தை அடக்கு பவனேயாகும்.
13. அனைவரிலும் பெரிய அறிவிலி உபகாரத்திற்குப் பதிலாக உபத்திரவம் செய்பவனேயாகும்.
14. அனைவரிலும் அற்பப்புத்தியுள்ளவன் செய்த நன்றியை மறப்பவனேயாகும்.
15. அனைவரிலும் அதிகக்கெட்டவன் புறம் பேசுபவனே யாகும்.
16. அனைவரிலும் பெரும் பாவி குர்ஆனையும் ஹதீதையும் மறுப்பவனேயாகும்.
17. அனைவரிலும் பெரிய விரோதி காக்காய் பிடிப்பவனேயாகும்.
18. அனைவரிலும் மோசக்காரன் நயவஞ்சகனேயாவான்.
19. அனைத்திலும் மன்னிக்க முடியாத குற்றம் இறைவனுக்கு இணைவைப்பதேயாகும்.
20. அனைவரிடமும் அதிகக் கெட்டவன் குழப்பக்காரனே யாவான். *(மிர்காத்துல் குலூப்)*

## 7. நல்லோரின் இலட்சணங்கள்

1. இம்மையின் பற்றுதலையும், பாசத்தையும் குறைத்து மறுமையின் பற்றுதலையும் பாசத்தையும் அதிகமாக்கிக் கொள்ளுவது.

2. வணக்கம் புரிவது, திருமறையை ஓதுவது, தஸ்பீஹ் செய்வது போன்ற நற்கிரியைகளின் பக்கமே நோக்கத்தை திருப்புவது.
3. அவசியமற்ற பேச்சுக்களை அகற்றிக் கொள்வது.
4. ஐவேளைத் தொழுகையினையும் அவைகளுக்குரிய நேரங்களில் நிறைவேற்றுவது.
5. தகாததும், சந்தேகத்திற்கிடமானதுமான பொருட்களை உண்ணாமலும், உபயோகிக்காமலும் இருப்பது.
6. நல்லோரின் சபைகளிலே அமர்ந்து அவர்களின் நல்லுபதேசங்களை செவி ஏற்பது.
7. தர்ம சிந்தனையுடையவராக இருப்பது.
8. சிருஷ்டிகளிடம் அன்பும், இரக்கமும் உள்ளவராக இருப்பது.
9. மக்களுக்கு ஊழியராகவும் உபகாரியாகவும் இருப்பது.
10. ஒவ்வொரு நேரமும், மரணத்தை நினைப்பது.
11. எவரிடமும் இனிமையாகவும், இணக்கமாகவும் பேசுவது.
12. தீமைசெய்தோருக்கும் நன்மையே செய்ய நாட்டங் கொள்வது.
13. பிறர் செய்த குற்றங்குறைகளை மன்னிப்பது.
14. பிரிந்து செல்லும் பந்துக்களை இணைத்து வாழ்வது.
15. பெரியோர்களைக் கண்ணியப்படுத்துவது.
16. சிறியோர் மீது இரக்கங்கொள்வது.
17. மலர்ந்த முகமுடையவராக இருப்பது.
18. பயபக்தி உடையராக இருப்பது.
19. கொடை கொடுக்கும் கரம் உடையவராக இருப்பது

*(துர்ரதுல் வாயிளீன்)*



## 8. தீயோரின் இலட்சணங்கள்

1. மறுமையின் பற்றுதலைக் குறைத்து இம்மையின் பற்றுதலை மனதிற் கொண்டு சதா பொருள் சேமிப்பதிலேயே மூழ்கிக்கிடப்பது.
2. மனோ இச்சைகளுக்கு இசைந்து அதன்படியே நடப்பது.
3. பொய் புறம் பேசுவதையே தொழிலாகக் கொள்வது.
4. தீயோருடனேயே சகவாசம் கொள்வது.
5. துற்குணங்களையே கையாள்வது.
6. ஐவேளைத் தொழுகைகளையும், அவைகளுக்கு உரிய நேரங்களில் தொழாமலிருப்பது.
7. பெருமையை விரும்பி, பெருமைக்காகவே எதையும் செய்வது.
8. பிறர் செய்யும் நல்ல காரியங்களைத் தடுப்பது.
9. சிருஷ்டிகளின்பால் அன்பு காட்டாமலும் இரக்கங் கொள்ளாமலுமிருப்பது.
10. கஞ்சத்தனமுடையோராக இருப்பது.
11. மரணத்தை மறந்து மனம் நாடியபடியெல்லாம் நடப்பது.
12. செய்த பாவங்களை நினைத்து வருந்தாமல் இருப்பது
13. தான் செய்த நன்மைகளைப் பெரிதென மதிப்பது.
14. உலக விஷயங்களில் தன்னைக் காட்டிலும் மேலானவர்களைக் கண்டு ஏங்குவது.
15. மார்க்க விஷயங்களில் அலட்சியமாக இருப்பது.
16. பிறரின் குற்றங்குறைகளை வெளிப்படுத்துவது.
17. அவசியமற்ற பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பது.
18. கடுகடுத்த முகமுடையோராக இருப்பது.
19. கல்நெஞ்சம் உடையவராக இருப்பது.

20. பெரியோரைக் கண்ணியப்படுத்தாமலும் சிறியோர் மீது இரக்கங்கொள்ளாமலுமிருப்பது. *(துர்ரதுல் வாயிளீன்)*

## 9. நாலாயிரம் வருடங்களில் நான் பெற்ற எட்டு அனுபவங்கள்

மேன்மை தங்கிய லுக்மானுல் ஹக்கீம் அவர்கள் கூறுகிறார்கள். அதாவது:— நான் நாலாயிரம் வருஷங்கள் நாலாயிரம் நபிமார்களுக்கு பணிவிடை செய்திருக்கிறேன். அந்த நபிமார்களின் நல்லுபதேசங்களிலிருந்து எட்டு விஷயங்களைத்தான் தேர்ந்தெடுத்தேன்.

அவைகள்:—

1. நீ தொழுகையில் இருக்கும்போது பெருமையை விட்டும் உன் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்திக்கொள்.
2. நீ பிறருடைய வீட்டிலிருக்கும் போது அங்குமிங்கும் நோட்டமிடாமல் உன் கண்களைப் பேணிக்கொள்.
3. நீ மக்களின் மத்தியிலிருக்கும் போது அடாதுடியான அனாவசியப் பேச்சுக்களை விட்டும் உன் நாவைப் பேணிக்கொள்.
4. நீ சாப்பிடும்போது வாய்நிறைய உணவைச் செலுத்துவதை விட்டும் உன் தொண்டையைப் பேணிக்கொள்.
5. நீ எத்தொழில் செய்தாலும், எந்நிலையில் இருந்தாலும் இறைவனைத் தியானம் செய்துகொள்.
6. சகல இன்பங்களையும் இழக்கச்செய்யும் மரணத்தை அதிகமாக நினைத்துக்கொள்.
7. நீ பிறருக்குச் செய்த உபகாரத்தைப் பெரிதென மதிக்காமல் அதை மறந்து விடு.
8. பிறர் உனக்குச் செய்த உபகாரங்களை மதித்து அதற்கு நன்றி செய்ய நாட்டங்கொள்.



## 10. இறை அச்சத்தின் அடையாளங்கள்

1. இறைவனின் ஏவல்களைச் சிரமேற்கொண்டு செயல்புரிவதில் இம்மியேனும் சருகாமலிருப்பது.
2. இறைவனால் விலக்கப்பட்டவைகளை விட்டும் விலகி இருத்தல்.
3. பொய், புறம், கோள், வீண் பேச்சுக்களை விட்டும் நாவைப் பேணி, திக்ரு, தியானம், திருமறை ஓதுதல் முதலிய நல்ல காரியங்களில் நாவை ஈடுபடுத்துவது.
4. ஹராமான உண்ணல், குடித்தலை விட்டும் வயிற்றைப் பாதுகாத்துக் கொள்வதோடு, ஹலாலான உணவாயினும் அளவுக்கு மீறி உண்ணாமல் பசி நீங்கும் அளவுக்கே உண்பது.
5. விலக்கப்பட்டவைகளைப் பார்க்காமலும், பொருட்களை ஆசை கொண்டு நோக்காமலும் தன் பார்வையை பாதுகாத்துக் கொள்வது. அதாவது எதைப் பார்ப்பினும் இறைவனின் தத்துவத்தையுணரும் கருத்துடன் நோக்குதல்.
6. திருடு, கொலை, கொள்ளை முதலான தகாத காரியங்களை விட்டும் தனது கைகளைப் பாதுகாத்துக் கொள்வது.
7. பாவமான காரியங்களின் பக்கம் நடந்து செல்லாமல் தனது கால்களைப் பாதுகாத்துக் கொள்ளல்.
8. கோபம், குரோதம், பகைமை, பொறாமை, அகப்பெருமை, ஆணவம் முதலியவைகளை விட்டும் தனது இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுதல்.

9. பெருமை, பிறரின் தயவு தாட்சண்யம் முதலிய எண்ணங்கள் ஏற்படாவண்ணம் தனது வணக்கத்தை இறைவனுக்கென்றே ஆக்கிக் கொள்ளல்.
10. உண்மைகளையும், நல்லவைகளைத் தவிர வேறு எதையும் கேளாமல் தனது காதுகளைப் பாதுகாத்துக் கொள்வது. *(துர்ரதுல் வாயிளீன்).*

## 11. நான்கு வினாக்களின் விடைகள்

அபா யஜீதுல் புஸ்தாமி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். நான் 4440 பெரியார்களிடம் நான்கு வினாக்களுக்கு விடை தேடி அலைந்தேன். ஆனால் அவர்கள் அளித்த விடைகள் என் இதயத்திற்கு சாந்தியளிக்காததால் மனக்கலக்கமடைந்து ஓர்மையற்றிருந்தேன்.

பின்பு, கஃபத்துல்லாஹ்விற்குச் சென்று கஃபாவின் வாயிலிலேயே தொங்கிக் கொண்டிருந்த வளையத்தைப் பிடித்து இறைவா! என் மார்க்கத்தின் விமோசனம் எதிலிருக்கிறதெனக் கதறி அழுத வண்ணம் முறையிட்டுக் கேட்டேன். அப்பொழுது ஒரு வானவர், ஏ அபாயஜீதுல் புஸ்தாமியே! வாக்குறுதியை நிறைவேற்றுவதிலே உன் மார்க்கத்தின் விமோசனமிருக்கிறது என பகர்ந்தார். இறைவா எனது ஈமானின் விமோசனம் எதிலிருக்கிறதெனக் கேட்டேன். அப்பொழுது ஒரு வானவர், ஏ அபா யஜீதுல் புஸ்தாமியே! வீண் பேச்சு, பொய், புறம், கெட்ட பேச்சு முதலியவைகளை விட்டும் நாவைப் பேணுவதிலே உன் ஈமானின் விமோசனமிருக்கிறது எனப்பகர்ந்தார். ஏ இரட்சகா! எனது ஆன்மாவின் விமோசனம் எதிலிருக்கிறதெனக் கேட்டேன். அப்பொழுது ஒரு வானவர், ஏ அபாயஜீதுல் புஸ்தாமியே! மனோ இச்சைகளை விடுவதிலே உன் ஆன்மாவின் விமோசனமிருக்கிறதெனப் பகர்ந்தார். ஏ இறைவா! என் உள்ளத்தின் விமோசனம் எதிலிருக்கிறதெனக் கேட்டேன்.



அப்பொழுது ஒரு வானவர், உலக இன்பங்களை விடுவதிலே உன் உள்ளத்தின் விமோசனம் இருக்கிறதெனப் பகர்ந்தார்.

*(மிர்காத்துல் குலூப்)*

## 12. தினந்தோறும் மண்ணறை விண்ணப்பிக்கிறது

ஒவ்வொரு நாளும் மனிதனை நோக்கி (கப்ரு) மண்ணறை கீழ்க்கண்டவாறு விண்ணப்பிக்கும் என்று ஹதீது ஷரீபிலே கூறப்பட்டுள்ளது.

1. ஏ ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது நடந்து சுற்றித் திரிகிறாய். நீ எனது வயிற்றுக்குள் அசைவற்றுத் துளும்பாமற்கிடப்பாய்.
2. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது தகாத (ஹராமான) பொருட்களை எல்லாம் தின்று கொண்டிருக்கிறாய். உன்னை என்னுடைய வயிற்றுக்குள் பாம்புகளும், புழுக்களும் தின்னும்.
3. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது பாவங்கள் பல செய்து கொண்டிருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் பற்பலவிதமான வேதனைகள் செய்யப் படுவாய்.
4. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது சிரித்துக் கொண்டிருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் அழுது கொண்டிருப்பாய்.
5. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறாய். நீ என் வயிற்றுக்குள் கவலையும், கை சேதமும் அடைவாய்.
6. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது உண்டு, சுகித்துக் கொழுத்துப் பருத்து இருக்கிறாய். நீ

என் வயிற்றுக்குள் சின்னா பின்னப்பட்டுச் சிதைந்து, சீரழிந்து விடுவாய்.

7. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது வெளிச்சத்தில் இருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் கும்மிருட்டில் கிடப்பாய்.

8. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது கண்ணியமாகவும், கம்பீரமாகவும் இருக்கிறாய். நீ என் வயிற்றுக்குள் இழிவாக்கப்படுவாய்.

9. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது மனைவி, மக்கள், உற்றார் உறவினருடன் உல்லாசமாக இருக்கிறாய். நீ என்னுடைய வயிற்றுக்குள் தன்னந்தனியே தவித்துக் கொண்டிருப்பாய்.

10. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய முதுகின் மீது வாசனைத் திரவியங்கள் பூசி மணங்கமழ அலங்கார மாகத் திகழ்கிறாய். நீ என்னுடைய வயிற்றுக்குள் நாற்றமெடுத்து, துர்வாடை பிடித்து வெறுக்கப்படுவாய்.

11. ஆதமுடைய மகனே! நீ என்னுடைய நெருக்கத்தையும், என்னுள் நிகழவிருக்கும் விதவிதமான வேதனை களையும், பயங்கரமான சம்பவங்களையும் அறியாமல் திரிகிறாய்.

12. ஆதமுடைய மகனே! நான் தனிமையின் வீடு, இருள் சூழ்ந்த இடம் என்பதை எந்த வஸ்து உன்னை மறக்கடித்தது?

13. ஆதமுடைய மகனே! நீ இறைவனுக்கு வழிபட்டு நடந்திருந்தால் நான் உனக்குச் சொர்க்கப் பூங்காவாக ஆவேன். வழிபட்டு நடக்காதிருந்தால் நான் உனக்கு வேதனைக்குரிய இடமாக ஆவேன்.

14. ஆதமுடைய மகனே! நீ ஓதிய குர்ஆன் உனக்கு என் வயிற்றுக்குள் துணையாக இருக்கும். நீ தொழுத தஹஜ்ஜுதுத் தொழுகை உனக்குப் பிரகாசம் கொடுக்கும். நீ மறைமுகமாகச் செய்த தர்மம் உனக்கு விரிப்பாக



உதவும். மற்றும் நீ செய்த எல்லா நல்ல அமல்களும் உனக்குப் புதை பொருளாக நிற்கும்.

15. ஆதமுடைய மகனே! நீ நாடியபடியெல்லாம் நடந்து திரிகிறாய், சிரிக்கிறாய், மகிழ்கிறாய், பொருள் சேமிக் கிறாய், உட்காருகிறாய், இன்னும் என்னென்னமோ வெல்லாம் செய்கிறாய். ஆனால் ஒரு நாள் நீ என்னுள் வந்தே ஆக வேண்டும். அப்போது வேதனைப்படுவாய், வியாகூலமடைவாய், அழுதுபுலம்புவாய், துயரப்படுவாய், இழிவாக்கப்படுவாய், இருளிலே தனித்துக் கிடப்பாய்.

*(முன்தஹல் மவாயிழ்)*

## 13. ஏ தாவூதே! ஞானோபதேசம் பெறுவீராக!!

இறைவன், ஹஜ்ரத் தாவூத் (அலை) அவர்களை நோக்கி ஏ தாவூதே! நீர் லுக்மானுல் ஹகீமிற்காக ஒரு ஆசனத்தை அமைத்து அதில் அவரை அமரச்செய்து அவரிடம் ஞானோபதேசம் பெறுவீராக என்று கட்டளை இட்டான். அவ்வாறே ஹஜ்ரத் தாவூது (அலை) அவர்கள் ஒரு சிம்மாசனத்தை அமைத்து அதில் லுக்மானுல் ஹகீமை அமரச் செய்து ஒரு மாணவன் ஆசிரியரிடம் அமருவது போன்று பணிவுடன் அமர்ந்து உபதேசம் புரிய வேண்டினார்கள். அப்போது லுக்மானுல் ஹகீம் அவர்கள், ஏ தாவூதே! முன்னோர், பின்னோர்களுடைய நற்கிரியைகள் எதில் அடங்கியுள்ளதோ அத்தகைய ஐந்து விஷயங்களை உமக்கு உபதேசிக்கிறேன். அவைகளைப் பாடமிட்டுப் பண்படைவீர்களாக என்று கூறினார்கள். அவைகள்:—

1. ஏ தாவூதே! நீ உலகில் எந்தளவு தங்குவாயோ, அந்த அளவுதான் உனக்கு உலகப் பாசமும் பற்றும் இருக்க வேண்டும்.

2. ஏ தாவூதே! மறுமையில் (சொர்க்கத்தில்) எவ்வளவு காலம் தங்கவேண்டுமென ஆசைப்படுகிறாயோ அவ்வளவு அதிகமாக நற்கிரியை புரி.
3. ஏ தாவூதே! உன்னால் நரக நெருப்பை எவ்வளவு தூரம் பொறுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் பாவம் செய்வதில் வீரங்கொள்.
4. ஏ தாவூதே! உனது எஜமானாகிய அல்லாஹ்வினுடைய தேவை உனக்கு எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நீ அல்லாஹ்விற்கு வழிபட்டு நடந்துகொள்.
5. ஏ தாவூதே! உனது எஜமானாகிய அல்லாஹ்விற்கு நீ மாறு செய்ய நாடினால் அவன் உன்னைக் காணாத இடத்திற்குச் சென்றுவிடு. *(மிர்காத்துல் குலூப்)*

## 14. பள்ளியின் (மஸ்ஜிதின்) ஒழுக்கங்கள்

1. பள்ளிவாசலுக்கு வந்தவுடன் அங்கு எவரேனும் இருந்தால் அவர்களுக்குச் சலாம் கூற வேண்டும். எவரும் இல்லையானால் "அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்" எனக் கூறிக் கொள்ள வேண்டும்.
2. பள்ளியினுள் சென்றதும் தஹிய்யத்துல் மஸ்ஜிது இரண்டு ரக்அத் நபில் தொழ வேண்டும்.
3. பள்ளியினுள் விற்பனை, கொடுக்கல், வாங்கல் செய்யக்கூடாது.
4. பள்ளியினுள் கத்தி, வாள் முதலான ஆயுதங்களை உறையிலிருந்து உருவி எடுக்கக்கூடாது.
5. காணாமற்போன பொருள்களைப் பள்ளியினுள் தேடவோ விசாரிக்கவோ கூடாது.



6. பள்ளியினுள் திக்ரு அல்லாமல் மற்றவைகளைச் சப்தமிட்டுப் பேசலாகாது.
7. பள்ளியினுள் உலக சமாச்சாரங்களைப் பேசலாகாது; அவ்வாறு பேசுவது நாற்பது வருடத்திய நல் அமல்களை அழித்து விடும்.
8. பள்ளியினுள் அமர்ந்திருப்போரை விலக்கிக்கொண்டு உள்ளே செல்லலாகாது.
9. தொழுகைக்கு இடம் பிடிப்பதற்காக மற்றவர்களிடம் சச்சரவு செய்யலாகாது.
10. ஸஃப்ஃபில் (வரிசையில்) நிற்கும்போது பிறரை இடித்து இடையூறு செய்யக்கூடாது.
11. தொழுபவருக்கு முன் குறுக்கே செல்லக்கூடாது.
12. பள்ளியினுள் எச்சில் உமிழ்வதும், ஜன்னல் வழியாக துப்புவதும் கூடாது.
13. பள்ளியினுள் விரல்களைச் சொடக்கு (நெட்டி) விடக்கூடாது.
14. பள்ளிக்குள் பைத்தியக்காரர்களையும், சிறுவர்களையும் வரவிடலாகாது.
15. பள்ளியை, குப்பை கூளம் முதலிய அசுத்தமானவை களை விட்டும் பரிசுத்தமாக்கி வைக்க வேண்டும்.
16. பள்ளிகளில் இருக்கும்போது திக்ரு, திருக்குர்ஆனை ஓதுவது, தஸ்பீஹ் செய்வது முதலிய நற்கருமங்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

## 15. ஷைத்தானின் நண்பர்கள்

ஒரு நாள் திருநபி (ஸல்) அவர்கள் ஷைத்தானை நோக்கி எனது உம்மத்தோரில் உனக்கு நண்பர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டார்கள். அதற்கு ஷைத்தான் பத்துபேர்கள் என்று கூறினான். அவர்கள்:--

1. அநீதமாக ஆட்சி புரிந்து மக்களைக் கஷ்டப்படுத்தும் அரசன்.
2. பொறாமை கொள்கிறவன்.
3. பொருளை எவ்வாறு சேமிக்கிறோம்; அதை எவ்வாறு செலவு செய்கிறோம் என்று இலட்சியம் செய்யாத சீமான்.
4. அநீதம் செய்யும் அரசனை உண்மைப்படுத்தும் அறிஞன்.
5. அளவு, நிறுவையில் மோசம் செய்யும் வியாபாரி.
6. மக்கள் பட்டினியாலும், பஞ்சத்தாலும் பரிதவிக்கும் போது விலை ஏறட்டும் என்றெண்ணி உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருப்பவன்.
7. விபச்சாரம் செய்யும் ஆண்களும், பெண்களும்.
8. வட்டி வாங்குகிறவர்கள்.
9. உலோபிகள் — கஞ்சர்கள்.
10. மதுபானம் அருந்துகிறவர்கள்.

## 16. ஷைத்தானின் விரோதிகள்

ஒரு நாளன்று பெருமானார் (ஸல்) அவர்கள் ஷைத்தானை நோக்கி, எனது உம்மத்தோரில் உனக்கு விரோதிகள் எத்தனை பேர்கள் என்று கேட்டார்கள். அதற்கு ஷைத்தான் இருபது பேர்கள் என்று கூறினான். அவர்கள்:—

1. ஏ முஹம்மதே நீர் எனது முதல் விரோதியாவீர்.
2. கற்றபடி நடந்தொழுகும் ஆலிம் (அறிஞன்).
3. குர்ஆன் ஷரீபை மனனம் செய்து அதிலுள்ளபடி நடந்தொழுகும் ஹாபிஸ்.
4. அல்லாஹ்வின் திருப்தியை நாடி ஐவேளையும் பாங்கு சொல்லும் முஅத்தின் (தொழுகையின் அழைப்பாளர்).
5. ஏழை — எளியோர் மீது இரக்கம் கொள்பவர்.



6. இரக்கமுள்ள இதயமுடையவர்.
7. உண்மையான விஷயங்களுக்கு அடிபணிந்து நடப்பவர்.
8. அல்லாஹ்வின் வணக்கத்திலே வளர்ந்தோங்கிய வாலிபர்.
9. அனுமதிக்கப்பட்ட (ஹலால்) உணவை உண்பவர்.
10. இறைவனுக்கென்றே நேசங்கொள்ளும் இருவாலிபர்கள்.
11. ஐவேளையும் ஜமாஅத்தோடு தொழுகிறவர்கள்.
12. ஜனங்களெல்லாம் நித்திரை செய்யும்போது விழித்திருந்து வணக்கம் புரிகிறவர்.
13. விலக்கலான (ஹராம்) காரியங்களை விட்டும் விலகி இருப்பவர்.
14. எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் உபதேசம் செய்யும் உபதேசி.
15. எப்போதும் ஒளுவுடனேயே இருப்பவர்.
16. நல்லொழுக்க நற்குண சீலர்.
17. ஈவு இரக்கமுள்ள தன்மை உடையவர்.
18. அல்லாஹ் பொறுப்பேற்றுக்கொண்டவைகளை உண்மையாக்கி வைப்பவர்.
19. விதவைகளுக்கு உபகாரம் செய்பவர்.
20. மரணத்திற்குத் தயாராக இருப்பவர்.

## 17. அல்லாஹ்வின் விரோதிகள்

மறுமை நாளில் இறைவன் சிலரை அருள்கொண்டு பார்க்கவும் மாட்டான். அவர்களுடன் பேசவும் மாட்டான். அவர்களின் பாவத்தை மன்னித்துப் பரிசுத்தப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்கு விதவிதமான வேதனையைக் கொடுப்பான். அவர்களே அல்லாஹ்வின் விரோதிகளாவார்கள். அவர்கள்:—

1. தனது சொந்த இடத்திலிருக்கும் தண்ணீர்த் தடாகத்தில் தேவைக்கு அதிகமாகத் தண்ணீர் இருந்தும் அதில் வழிப்போக்கரையும் மற்றவர்களையும் குடிக்கவிடாமல் தடுப்பவர்.
2. பொய்சத்தியம் செய்து தனது சரக்கின் குற்றங் குறைகளை மறைத்து விற்பனை செய்யும் வியாபாரி.
3. உலகாதாயத்தை அடைவதற்காக யாராவது ஒரு (ஷெய்கு) பெரியாரிடம் (பைஅத்) உடன்படிக்கை செய்து கொள்கிறவர்.
4. விபச்சாரம் செய்யும் வயோதிக ஆடவர், பெண்டிர்.
5. உபகாரம் செய்து உபத்திரவம் செய்கிறவர்.
6. கரண்டை மொளி மறையும்படி ஆடை அணிபவர்
7. பெருமை பாராட்டித் திரியும் ஏழைகள்
8. ஒரு பொருளை விலை பேசி விற்று விட்டு மறுபடியும் நான் அதை விற்கவில்லை என்று கூறிச் சத்தியமும் செய்து திருப்பி வாங்கிக் கொள்கிறவர்.
9. பருவமடையாத சிறு குழந்தைகளிடம் தகாத வேலை செய்கிறவர்.
10. தன் கையால் விந்தை வெளியாக்குகிறவர்.
11. ஜீவ வர்க்கங்களைப் புணர்ச்சி செய்கிறவர்.
12. மனைவியின் பின் துவாரத்தில் புணருகிறவர்.
13. ஒரு பெண்ணையும் அவளது மகளையும் சேர்த்து நிக்காஹ் செய்கிறவர்.
14. தனது மஹல்லாவிலுள்ள பள்ளியில் தொழாதவர்.
15. அண்டை வீட்டாரைத் துன்புறுத்துகிறவர்.
16. தனது வீட்டிலிருக்கும் குர்ஆன் ஷரீபை ஓதாமல் வெறுமனே வைத்திருப்பவர்.
17. குர்ஆன் ஷரீபை மனனஞ் செய்தும் அதிலுள்ளபடி நடவாத ஹாபிஸ்—ஆலிம்.



18. நற்குணமும், நல்லொழுக்கமும் உள்ள தனது மனைவியைத் துன்புறுத்தித் துயரத்துக்குள்ளாக்கும் கணவர்.
19. நற்குணமும், நல்லொழுக்கமும் உள்ள தனது கணவனைத் துன்பத்திற்குள்ளாக்கும் மனைவி.
20. உலமாக்களின் சொல்லுக்குச் செவி சாய்க்காதவர்.
21. குர்ஆன் ஷரீபில் தன் சொந்த அபிப்ராயத்தைப் புகுத்தி விரிவுரை செய்கிறவர். அதாவது தன் இஷ்டத்திற்குத் தக்கவாறு வியாக்கியானம் செய்கிறவர்.
22. இறைவனால் விதிக்கப்பட்ட விதியைப் பொய்யாக்குகிறவர்.
23. இறைவன் ஹறாமாக்கிய (விலக்கிய)வைகளை ஹலாலா (ஆகுமானதா)க்கியவர்.
24. இறைவன் ஹலாலான (ஆகுமாக்கிய)வைகளை (ஹறாமாக) விலக்கியவர்.
25. திருநபியின் சுன்னத்துக்களை விட்டு விட்டுத் தன் நாட்டப்படியெல்லாம் நடந்தொழுகியவர்.
26. பிரஜைகளுக்குச் செயலாற்ற முடியாத சட்டங்களை விதித்து அக்கிரம ஆட்சி புரியும் அரசன்.
27. அவசியமும் உரிமையும் இல்லாமல் உயிர்வதை செய்தவர்.
28. பிறரின் உயிருக்கும் உடமைக்கும் பங்கம் விளைவித்தவர்.
29. தன் மனைவியைப் பிறருக்கு கூட்டிக் கொடுத்தவர்.
30. இறைவனால் விதிக்கப்பட்ட ஜக்காத்தைக் கொடாதவர்.
31. ஹஜ்ஜுச் செய்யக் கடமைப்பட்டிருந்தும் அதை நிறை வேற்றாதவர்.
32. மக்களின் மத்தியில் புரட்சியை உண்டாக்கியவர்.
33. மதுபானம் அருந்துவதையே பழக்கமாகக் கொண்டவர்.

34. கூலிக்காரர்களிடம் வேலை வாங்கிக் கொண்டு அவர்களின் கூலியைக் கொடாதவர். *(முன்தஹல் மவாயிஜ்)*

## 18. இறைவன் மூஸா (அலை) அவர்களை நோக்கி!

ஒரு நாளன்று இறைவன் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களை நோக்கி, ஏ மூஸாவே! நீர் எனக்காக வேண்டி என்னென்ன நற்கிரியை புரிந்தீர் எனக்கேட்டான். அப்போது ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் இறைவா! நான் உனக்காகவே தொழுதேன், உனக்காகவே நோன்பு நோற்றேன். உன்னையே சதா தஸ்பீஹ் செய்தேன் என்று கூறினார்கள். அப்போது இறைவன் ஏ மூஸாவே! நீர் ஸிராதுல் முஸ்தகீம் பாலத்தை மின்னல் போன்று விரைவாக கடந்து செல்வதற்காகத் தொழுதீர். உம்மை நரகத்தை விட்டும் பாதுகாத்துக் கொள்வதற்காக நீர் நோன்பு நோற்றீர், உமக்குச் சொர்க்கத்தில் பல பதவி (தரஜாக்)கள் உயர்த்தப்படுவதற்காகத் தஸ்பீஹ் செய்தீர். இவைகளெல்லாம் நீர் உமக்காகச் செய்து கொண்டவைகளாகும். ஆனால், என் திருப்திக்குரிய எனக்குச் சொந்தமான நற்கிரியை புரிந்திருக்கிறீரா? என்று கேட்டான். அது சமயம் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் 'கோ' வென்று அழுது இறைவா! உனக்குச் சொந்தமான அத்தகைய அமல்கள் எவை? அவைகளை அறிவித்தருள்வாயாக எனக்கேட்டார்கள். இறைவன் கீழ்க்காணும் அமல்களை அறிவித்து அவைதான் என் திருப்திக்குரியவை என்றும் கூறினான். அவைகள்:—

1. ஏ மூஸாவே! பசித்தோருக்கு உணவளித்துப் பசி ஆற்றுவீராக.
2. ஏ மூஸாவே! தாகித்தோருக்குத் தண்ணீர் புகட்டித் தாகத்தைத் தணிப்பீராக.
3. துணி இல்லாதவருக்கு துணி அணிவிப்பீராக.
4. அநீதத்திற்குள்ளானவருக்கு உதவி புரிவீராக.
5. அறிஞர் (உலமாக்)களுக்குச் சங்கை செய்வீராக.
6. அபயம் தேடுவோருக்கு அபயம் அளிப்பீராக.
7. உமது ஒவ்வொரு மூச்சையும், பேச்சையும், செயலையும் முகஸ்துதியை விட்டும் தூய்மையாக்கிக் கொள்வீராக.

*— மிர்காத்துல் குலூப்.*



## 19. ஹதீது குத்ஸியிலே!

இறைவன் ஹதீது குத்ஸியிலே கூறுகிறான்: ஏ ஆதமுடைய மகனே! உன்னிடத்திலிருந்து ஆறு காரியங்கள் ஏற்பட்டால் என்னிலிருந்து ஆறு காரியங்கள் உண்டாகும்.

1. ஏ ஆதமுடைய மகனே! உனக்குச் சொர்க்கம் என்னிடம் கிடைக்கும்; ஆனால் உன்னிலிருந்து வழிபாடு உண்டாக வேண்டும்.
2. ஏ ஆதமுடைய மகனே! தெய்வீகத் தன்மை என்னிலிருந்து உண்டாகும்; ஆனால் அடிமைத்தனம் உன்னிலிருந்து உண்டாக வேண்டும்.
3. ஏ ஆதமுடைய மகனே! ஒப்புக்கொள்வது என்னிலிருந்து ஏற்படும்; ஆனால் உன்னிலிருந்து பிரார்த்தனை உண்டாக வேண்டும்.
4. ஏ ஆதமுடைய மகனே! சோதனை என்னிலிருந்து உண்டாகும்; ஆனால் பொறுமை உன்னிலிருந்து உண்டாக வேண்டும்.
5. ஏ ஆதமுடைய மகனே! ஆகாரம் கொடுப்பது என்னிடமிருந்து ஏற்படும்; ஆனால் நன்றி செலுத்துவது உன்னிலிருந்து உண்டாக வேண்டும்.

6. ஏ ஆதமுடைய மகனே! மன்னிப்பு என்னிலிருந்து உண்டாகும்; ஆனால் மன்னிப்புத் தேடுவது உன்னிலிருந்து உண்டாக வேண்டும். *– மிர்காத்துல் குலூப்*

## 20. அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்

எனது உம்மத்தோர்களே! உங்களுக்கு ஐந்து விஷயங்களை உபதேசிக்கிறேன். அவைகளை அதிகமாகச் சிந்தனை செய்து கொள்வீர்களானால் உங்களுக்கு இறைவனின் அன்பும் அருளும் உண்டாகும் என நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

1. ஜனங்கள் உங்களுக்கு செய்த உபகாரங்களை அதிகமாகச் சிந்தனை செய்வதை விட, அல்லாஹ் உங்களுக்குச் செய்திருக்கும் உபகாரங்களை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.
2. இம்மையை அதிகமாகச் சிந்தனை செய்வதை விட அதாவது இவ்வுலகின் இன்பங்களை நினைப்பதைவிட மறுமையின் இன்பங்களை அதிகமாக நினையுங்கள்.
3. நீங்கள் செய்திருக்கும் நற்கிரியைகளை அதிகமாகச் சிந்தனை செய்வதைவிட, உங்களில் நிகழ்ந்துள்ள துர்க்கிரியைகளை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.
4. நீங்கள் உங்களின் ஜீவியத்தை அதிகமாகச் சிந்திப்பதைவிட, உங்களுக்கு நிகழப்போகும் மரணத்தை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.
5. பிறருடைய குற்றங்குறைகளை அதிகமாகச் சிந்திப்பதைவிட, உங்களின் குற்றங்குறைகளை அதிகமாகச் சிந்தித்துத் திருத்திக் கொள்ளுங்கள்.

*– மிர்காத்துல் குலூப்.*



## 21. ஈமானால் சிறந்தவர் யார்?

ஒரு நாளன்று நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் சங்கை மிகு ஸஹாபாக்களை நோக்கிக் கீழ்க்கண்டவாறு வினவினார்கள்.

நாயகம் (ஸல்) : தோழர்களே! உங்களிடத்தில் ஈமானால் சிறந்தவர் யார்?

ஸஹாபாக்கள் : இறைத்தூதரே! மலக்கு (வானவர்)கள் தான் ஈமானால் சிறந்தவர்கள் என்று கருதுகிறோம்.

நாயகம் (ஸல்) : மலக்குகள் அல்லாஹ்வின் சந்நிதானத்திலிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு ஈமான் கொள்ளாமலிருக்க இயலும்? ஆதலால் அவர்கள் ஈமானால் சிறந்தவர்களல்ல.

ஸஹாபாக்கள் : அவ்வாறானால் நபிமார்கள்தான் ஈமானால் சிறந்தவர்கள் எனக் கருதுகிறோம்.

நாயகம்(ஸல்) : நபிமார்கள் மீது அல்லாஹ்வின் வஹீ இறங்கிக் கொண்டிருக்கும்போது அவர்கள் எவ்வாறு ஈமான் கொள்ளாமலிருக்க முடியும்? அவர்களும் ஈமானால் சிறந்தவர்களல்ல.

ஸஹாபாக்கள் : அப்படியானால் நாங்கள்தான் ஈமானால் சிறந்தவர்கள் என்று கருதுகிறோம்.

நாயகம்(ஸல்) : நான் உங்களின் மத்தியிலிருக்கும் போது நீங்கள் எவ்வாறு ஈமான் கொள்ளாமல் இருக்க இயலும்? நீங்களும் ஈமானால் சிறந்தவர்களல்ல.

ஸஹாபாக்கள் : அப்படியானால் அதுபற்றி அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே அதிகம் அறிந்தவர்களாவார்கள்.

நாயகம்(ஸல்) : என்னிடத்தில் ஈமானால் சிறந்தவர் யார் என்றால் பிற்காலத்தில் ஒரு குழுவினர் தோன்றுவார்கள். அவர்கள் வேதத்தை (குர்ஆன் ஷரீபை)ப் பெற்று, அது அல்லாஹ்வின் திருவாக்கியம் என்று நம்பி விசுவாசங்கொண்டு அதைக் கற்றுணர்ந்து அதன் போதனைப்படி நடந்தொழுகுவார்கள். அவர்களே ஈமானால் சிறந்தவர்களாவார்கள்.

கருத்து: எதையும் பார்த்து நம்பிக்கை கொள்வதை விட பார்க்காமலேயே நம்புவது தான் சிறந்தது என்பதை மேற்காணும் சம்பாஷணை விளக்குகிறது.

## 22. மறுமையில் நிகழும் ஒரு சம்பவம்

இறைவன் மறுமை நாளில் ஒரு மனிதனுடைய நன்மை, தீமைகளைக் கணக்கிடும்படி மலக்குகளுக்கு உத்திரவிடுவான். அதன்படிக் கணக்கிட்டுப் பார்க்கும்போது அம்மனிதனின் தீமைகள் நன்மைகளைவிட அதிகமாகத் தெரியும். அதற்காக அம்மனிதனை நரகத்திற்கு அழைத்துச் செல்லுமாறு இறைவன் மலக்குகளுக்கு உத்திரவு செய்வான். அதன்படி ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அம்மனிதனை நரகத்திற்கு அழைத்துச் செல்கையில் அம்மனிதனிடம் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்குமாறு ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு கட்டளை இடுவான். அதற்கேற்ப கீழ்க்கண்டவாறு சம்பாஷணை நடக்கும்.



ஜிப்ரயீல் : ஏ மனிதனே! நீ உலமாக்களி (அறிஞர்களி)ன் சபைகளிலே உட்கார்ந்திருந்ததுண்டா?

மனிதன் : நான் உட்கார்ந்ததில்லை.

ஜிப்ரயீல் : ஏ மனிதனே! உலமாக்களுடன் உட்கார்ந்து உணவு உண்டதுண்டா?

மனிதன் : உட்கார்ந்து உணவு உண்டதில்லை.

ஜிப்ரயீல் : ஏ மனிதனே! நீ உலமாக்கள் வசித்த ஊரிலாவது வசித்திருக்கிறாயா?

மனிதன் : வசித்ததில்லை.

ஜிப்ரயீல் : ஏ மனிதனே! நீ உலமாக்கள் குடியிருந்த தெருவிலாவது குடியிருந்திருக்கிறாயா?

மனிதன் : குடியிருந்ததில்லை.

ஜிப்ரயீல் : ஏ மனிதனே! நீ உலமாக்களை நேசித்திருக்கிறாயா?

மனிதன் : நேசித்ததில்லை.

ஜிப்ரயீல் : ஏ மனிதனே! நீ உலமாக்களை நேசித்தவரையாவது நேசித்திருக்கிறாயா?

மனிதன் : ஆம் நேசித்திருக்கிறேன்.

இதையறிந்த இறைவன் ஏ ஜிப்ரயீலே! இம்மனிதன் உலமாக்களை நேசித்த மனிதனை நேசித்த காரணத்தால் இவனை நான் மன்னித்து விட்டேன். ஆகையால் இம்மனிதனைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வீராக எனக் கூறுவான்.

மறுமையில் முதலில் நபிமார்கள், பின்பு உலமாக்கள் அதன்பின் ஷுஹதாக்கள் ஆகிய மூவகுப்பினரும் தாம், தாம் நாடியவர்களுக்கு ஷபாஅத் (சிபாரிஷ்) செய்வார்கள் என்று ஹதீதிலே கூறப்பட்டிருக்கிறது. இதன்படி உலமாக்களின் ஷபாஅத்தால் இம்மனிதனும் மன்னிப்புப் பெற்று சொர்க்கம் புகுவான் எனத் தெரிகிறது. *— தகாயிக்குல் அக்பார்.*

## 23. பெரும் பாவமான காரியங்கள்

1. வலிமையிலும், திறமையிலும், அறிவிலும் இறைவனுக்கு இணைவைப்பது.
2. இறைவனுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைப் பிறருக்குச் செய்வது.
3. இறைவன் மீதல்லாமல் பிறர்மீது நேர்ச்சை செய்வது.
4. ஏதாவது கஷ்டம் நஷ்டம் நிகழ்ந்தால் அவ்லியாக்கள் முதலிய நல்லோர்களை அழைத்து நிவர்த்தி செய்யத் தேடுவது.
5. இன்ன பெரியார் நான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அறிகிறார் என்றும்; நான் நினைக்கும் போது என் முன்தோன்றுகிறார் என்றும் நம்புவது.
6. கள், கஞ்சா, அபின், விஸ்கி, பிராந்தி, சாராயம் முதலிய போதை வஸ்துக்களை உபயோகிப்பது, பிறரையும் உபயோகிக்கச் செய்வது.
7. எதிரிகள் குறைவாக இருக்கும்போது போர்க்களத்திலே புறமுதுகு காட்டி ஓடுவது.
8. மாந்திரீகம் செய்வது; பிறரையும் செய்ய வைப்பது.
9. அனாதைகளின் சொத்துக்களை அநீதமாக அனுபவிப்பது.
10. மக்காவிற்குள் செய்யக்கூடாதென்று விலக்கப் பட்டிருக்கும் காரியங்களைச் செய்வது.
11. வட்டி வாங்குவது, கொள்ளையடிப்பது, பன்றியின் மாமிசத்தைப் புசிப்பது.
12. பொய்ச்சாட்சி சொல்வது.



13. எவ்விதக் காரணமுமின்றித் தெரிந்த விஷயத்திற்குச் சாட்சி சொல்ல மறுப்பது.
14. மார்க்கம் அனுமதித்துள்ள காரணங்கள் இல்லாமல், ரமளான் மாதத்தின் பகற் காலங்களில் உண்பது, குடிப்பது.
15. பந்து மித்திரர்களை பகைத்துப் பிரித்து வைப்பது.
16. எப்பொழுதும் தொழுகையைப் பிற்படுத்தியே தொழுவது.
17. அளவிலும் நிறுவையிலும் குறைவு செய்வது. அதாவது தான் பிறரிடம் வாங்கும்போது நிறைய அளந்து நிறுத்து வாங்குவது. பிறருக்கு தான் கொடுக்கும்போது குறைவாக அளந்து நிறுத்துக் கொடுப்பது.
18. அக்கிரமமாக அன்னியரின் பொருட்களை அனுபவிப்பது.
19. ஜக்காத் தன்மீது கடமையாக இருந்தும் அதை நிறைவேற்றாமலிருப்பது.
20. ஹஜ்ஜு தன்மீது கடமையாக இருந்தும் அதைச் செய்யாமலிருப்பது.

21.பொய்ச்சத்தியம் செய்வது. 22. அல்லாஹ்வையும், ரசூல் (ஸல்) அவர்களின் மனைவிமார்களையும் ஸஹாபாக் களையும் இழிவாக எண்ணுவது அல்லது தீங்காகப் பேசுவது, சபிப்பது. 23. கை லஞ்சம் வாங்குவது. 24. நன்மையை ஏவவும், தீமையைத் தடுக்கவும் சக்தி பெற்றிருந்தும் அதைச் செய்யாமல் ஒதுங்கி இருப்பது. 25. தற்கொலை செய்வது, அல்லது தனது அவயங்களில் ஒன்றைத் துண்டிப்பது. 26.வாக்குறுதியை நிறைவேற்றச் சக்தி இருந்தும் அதை நிறை வேற்றாமலிருப்பது. 27. நல்ல காரியங்களைத் தடுத்து, தீய காரியங்களைத் தூண்டுவது. 28. உலமாக்களை இழிவாகவும், தாழ்த்தியும் பேசுவது. 29. குர்ஆன் ஷரீபை மனனம் செய்து

அதை மறந்து விடுவது. 30. உயிர்ப் பிராணிகளை நெருப்பில் போட்டுக் கொல்வது.

31. எவ்விதக் காரணமுமின்றி ஒரு பெண் தன் புருஷனுடன் இணங்காமலிருப்பது. 32. ஒரு புருஷன் பெண்ஜாதியைக் காரணமின்றித் துன்புறுத்துவது. 33.அல்லாஹ்வுடைய மன்னிப்பின் மீது நம்பிக்கை கொள்ளாமலும், அவன் தண்டனையைப் பயப்படாமலும் இருப்பது. 34. சீட்டு முதலான சூதாட்டங்கள் ஆடுவது. 35.வீணான காரியங்களில் பொருளைச் செலவிடுவது. 36.அல்லாஹ் அல்லாதவர்களின் பேரால் பிராணிகளை அறுத்துப் பலியிடுவது. 37. பெருமையாகவும் பிறரைவிடத் தன்னை உயர்வாகவும் எண்ணுவது. 38. பொறாமை, கோபம், அகம்பாவம், குரோதம் கொள்வது. 39. சூழ்ச்சி, வஞ்சனை, சதிமோசம், ஏமாற்றுதல் முதலான கெட்ட எண்ணங்கள் கொள்வது. 40. காபிர்கள், பெரும்பாவிகள் அனாச்சார அனுஷ்டானி முதலானவர்களையே தன் உற்ற நேயராகக் கொள்வது.

41. தொழுகை, நோன்பு முதலான மார்க்கக் கடமைகள் மீது வெறுப்பு கொண்டு அவைகளை நிறைவேற்றாமல் அலட்சியமாக இருப்பது. 42. ஹலாலான (ஆகுமான) வைகளை ஹறாம் (ஆகாதது) எனவும், ஹறாம் (ஆகாத)வைகளை ஹலால்(ஆகுமானது) எனவும் கருதுவது. 43. தீனுடைய வேலைகளில் குற்றங்குறைகளை ஏற்படுத்தி அதைச் செயல்படவிடாமல் இடையூறு செய்வது. 44. பர்லு, வாஜிபான கடமைகளை அறிந்திருந்தும் அவைகளை பிறருக்குச் சொல்லாமல் மறைத்து வைப்பது. 45.பள்ளிவாசல்களை அசுத்தம் செய்வது, சுத்தமில்லாமல் தொழுவது. 46. பயப்பட வேண்டிய அவசியமில்லாமலிருக்கும் போது காபிர்கள், அனாச்சார அனுஷ்டானிகளுக்குக் கண்ணியமும் மரியாதையுஞ் செய்வது. 47. அறிவும் திறமையும் இல்லாமல் மார்க்க பத்வா (தீர்ப்பு) அளிப்பது. 48.தனது அறிவுப்படி குர்ஆன் ஷரீபிற்கு வியாக்கியானஞ்



செய்வது. 49. நல்லோர் (ஸாலிஹீன்)களை இழிவாக எண்ணுவது. 50. ஒருவரைப் பற்றிப் புறம் பேசுவது அல்லது அவருக்கு எதிரிலேயே அவரைக் குறைவாகப் பேசுவது.

51. முஸ்லிம்களின் மீது கெட்ட சந்தேகங்கொள்வது. 52.அல்லாஹ் அல்லாதவைகளின் மீது சத்தியம் செய்வது. 53.குர்ஆன் ஷரீப் ஓதப்படும் இடத்திலிருந்து கொண்டு அதைக் கேளாமல் வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்பது. 54. குறிகாரர் களிடம் குறிபார்த்து அதை நம்புவது. 55. மறைவான விஷயங்களை அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களும் அறிகிறார்கள் என்று நம்புவது. 56. நபிமார்கள் மீது, அல்லது மலக்குகள், வேதங்கள், நரகம், சொர்க்கம், நன்மை, தீமைகள் நிறுக்கும் தராசு, ஸிராத்துல் முஸ்த்தகீம் பாலம், கப்ருடைய வேதனை, மறுமையில் நிகழவிருக்கும் சம்பவங்கள் முதலிய வைகளில் எதிலேனும் சந்தேகம் கொள்வது. 57. தாடியைச் சிரைப்பது, மீசையை வளர்ப்பது, தங்கம் வெள்ளிப் பாத்திரங்களில் உண்பது, குடிப்பது. 58. ஆண்கள் பட்டாடை அணிவது. 59. ஆண்கள் கை கால்களிலும், பற்களிலும் சாயம் பூசிக் கொள்வது. 60. டோலக், மிருதங்கம், வீணை, பக்கவாத்தியம், மேளதாளம் அடிப்பது, அதைச் செய்வோரைப் பாராட்டிப் பரிசு கொடுப்பது, டான்ஸ் முதலியவைகளை பார்ப்பது; அவர்களுக்கு அன்பளிப்புக் கொடுப்பது.

61. ஹறாமான (விலக்கலான) காரியங்களைச் செய்யும்போது பிஸ்மில்லாஹ் சொல்வது. 62. பொய்யான காரியங்களில் அல்லாஹ்வைச் சாட்சியாக்குவது. 63. இஸ்லாம் அல்லாத மார்க்கங்களைப் போற்றிப் புகழ்ந்து அதற்கு ஒப்ப நடப்பது. 64. காபிர்கள் பூஜை செய்த பொருட்களை விசேஷம் எனக்கருதித் தின்பது. 65. ஒரு நபியின் பேராலோ அவ்லியாக்களின் பேராலோ வேறு எதன் பேராலோ சடைமுடி வளர்ப்பது. 66. வேலையாட்களை அவர்களின் சக்திக்கதிகமாக வேலை வாங்குவது. 67. பெரியோர்களை மரியாதையின்றி பெயர்ச் சொல்லி அழைப்பது. 68. இரவு பகல் எந்த நேரமும் நல்ல உடைகளை அணிவதிலேயே

சிந்தனையைச் செலுத்துவது. 69. சக்தியிருந்தும் பெற்றோருக்கும் பந்துக்களுக்கும் பணிவிடை செய்யாம லிருப்பது. 70. தனது ஆசிரியர் பெரியார்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளுதல்.

71. மார்க்கத்தின் கடமையான காரியங்களைச் செய்ய சக்தியிருந்தும் அவைகளை நிறைவேற்றாதிருத்தல். 72.இறைவனால் கொடுக்கப்பட்ட பாக்கியங்களில் கஞ்சத்தனம் செய்தல். 73. தன் மனைவி மாதவிடாய் பிள்ளைப்பேற்றுத் தொடக்குள்ளவளாயிருந்தும் அவளைச் சேர்க்கை செய்தல். 74. மார்க்கத்திற்கு மாறான காரியங்களில் மனைவிக்கு வழிபட்டு நடத்தல். 75. அவசியமில்லாமல் தன் மனைவியை அங்கும் இங்கும் வெளியிற் செல்ல அனுமதிப்பது. 76.வசதியிருந்தும் தன் மனைவிகளுக்கு உணவு முதலியவை கொடாமல் கஷ்டப்படுத்துதுல். 77. பல மனைவி உள்ளவர் அவர்களுக்கிடையில் நீதமில்லாமல் நடந்து கொள்ளல். 78.அன்னியப் பெண்களை ஆசை கொண்டு நோக்குவது. 79.மனைவி மக்கள் விஷயத்தில் அல்லாஹ் ரசூலுடைய கட்டளைக்கு மாறாக நடந்து கொள்ளல். 80. ஒரு பெண் தன் புருஷனை மதிக்காமலும் அவன் கொடுத்த பொருட்களை அற்பமாகவும் கருதுவது.

81. பெண்கள் ஆண்களைப் போன்றும், ஆண்கள் பெண்களைப் போன்றும் வேஷந்தரிப்பது. 82. ஒரு பெண் தன் புருஷனின் அனுமதியின்றி வெளியிற் செல்லல். 83.ஒருவரின் வீட்டில் அவரின் அனுமதியின்றிப் பிரவேசித்தல். 84. ஒரு பெண் தன் புருஷனின் சக்திக்கு அதிகமாக உணவு, உடை கேட்டுத் துன்புறுத்தல். 85. கூலிக்காரர்களிடம் வேலை வாங்கிக் கொண்டு அவர்களின் கூலியை மோசம் செய்தல். 86.பிறருடைய முகஸ்துதிக்காக நற்கிரியை புரிவது. 87. தனது பக்தி வழிபாடுகளைப் பற்றிப் பெருமிதம் கொள்ளல். 88.மக்கள் பஞ்சத்தால் கஷ்டப்படும்போது உணவுப் பொருட்களை விலை ஏறட்டும் எனத் தேக்கி வைத்துக் கொள்ளல். 89. ஈதுகாஹ்விற்காகவோ அல்லது ஏதாவது சாக்காகவோ பிராணிகளை அறுத்துப் பலியிடுவது. 90.கப்ருக்கு சஜ்தாச் செய்தல் அல்லது அதைச் சுற்றுதல்.



91. ஒரு முஸ்லிமுடன் கோபித்துக் கொண்டு மூன்று தினங்களுக்குமேல் பேசாதிருத்தல். 92. ஒருவர் தம்மால் இயலாத விஷயங்களில் பொறுப்பேற்றுக் கொள்வது. 93.ஒருவரை இழிவுபடுத்தும் கருத்துடன் அவரின் குற்றங்குறை களைத் தேடித் திரிவது. 94. ஒரு பெண் தன் புருஷனின் இரகசியத்தையும் ஒரு ஆண் தன் மனைவியின் இரகசியத்தையும் வெளிப்படுத்துவது. 95. உரிமையும் காரண முமின்றி ஒரு முஸ்லிமைத் திட்டுவது, அடிப்பது. 96. ஒரு பெண்ணுக்கும் அவளின் புருஷனுக்குமிடையில் கோள் மூட்டி விடுதல். 97. ஹறாமான (விலக்கலான) பொருட்களால் பள்ளிவாசல் ஈதுகாஹ் கட்டுதல். 98. மாரடிப்பது ஒப்பாரி வைத்து அழுவது, விசனக்குறிகளின் ஆடைகளை அணிந்து கொள்வது. 99. கப்ருகளுக்கு விளக்குப்போட்டு வருடாந்திர விழாக்கள் நடத்துதல். 100. ஒருவருடைய பெயரால் தன் குழந்தைகளுக்கு மாலை அணிவிப்பதையும் காது மூக்குக் குத்துவதையும் சிறந்ததெனக் கருதி அவ்வாறு செய்தல்.

101. நான்காவது ஆண் குழந்தை பிறந்ததற்காக 3—ம் நாள் 6—ம் நாள் 10—ம் நாள் 40—ம் நாள் வருடாந்திரம் என்று குறித்துச் சடங்குகள் செய்வது கடமை எனக்கருதி அவ்வாறு செய்வது. 102. கரண்டை மொளி மறையும்படி ஆடை அணிவது. 103. தனது மர்மஸ்தானத்தைப் பிறருக்குக் காட்டுதல். 104. ஒலுவில்லாமல் தொழுவது, குர்ஆன் ஷரீபைத் தொடுவது. 105. அவயவங்கள் தெரியும்படிப் பெண்கள் மெல்லிய ஆடைகள் அணிவது. 106. தொழுகையில் இமாமுக்கு முந்தி ஏதேனும் ஒரு செயலைச் செய்வது. 107.போதையுள்ள பொருட்களை விற்பனை செய்து, சம்பாத்தியம் செய்வது. 108. பிராணிகளைப் புணருவது. 109. இத்தாவிலிருக்கும் ஒரு பெண்ணை நிக்காஹ் செய்வது. 110. சுயேச்சையான பெண்ணையோ ஆணையோ விற்பனை செய்வது.

111. ஜும்ஆத் தொழுகையின் நேரத்தில் வியாபாரம் செய்வது. 112. இறைவன் விதித்துள்ள தண்டனைகளில் இரக்கங்காட்டிச் சிபாரிஷ் செய்வது. 113. வேண்டுமென்றே குர்ஆன் ஷரீபைத் தவறாக ஓதுவது. 114. ஒருவர் சொல்லும் சலாமுக்கு ஜவாப் சொல்லாதிருப்பது. 115. நஞ்சு குடித்து அல்லது நீரில் மூழ்கி தற்கொலை செய்வது. 116. மார்க்கத்தின் வேலைகளில் சிரிப்பது பரிகசிப்பது. 117. பொதுப் பாதைகளில் இடையூறு செய்தல். 118. தானியம், உப்பு, சீனி முதலியவைகளைகளில் எடை அதிகமாவதற்காக வேறு வஸ்துக்களை கலப்படஞ் செய்தல். 119. தனது பொருளின் குற்றங்குறைகளை அறிந்திருந்தும் அதை வெளிப்படுத்தாமல் விற்று விடுதல். 120. ஒரு முஸ்லிமை நரகவாதி என்று அல்லது காபிரென்று கூறுதல்.

121. பாவமறியாப் பத்தினிப் பெண்கள் மீது விபச்சாரப் பழிசுமத்தல். 122. பொய், புறம், கெட்ட பேச்சுக்களைப் பேசுவது. 123. உரிமையும், அவசியமுமில்லாமல் ஒரு உயிரைக் கொல்வது. இன்னும் இவைகள் போன்று பாவத்தை விளைவிக்கும் பாதகச் செயல்கள் அனேகமிருக்கின்றன. அவைகளை ஆழ்ந்தறிந்து கொள்வது மிகமிக அவசியமாகும்.

## 24. மாதூய எண்ணத்தின் மாபெரும் சக்தி

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாக அப்துல்லாஹிப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமூகத்தவரில் மூவர் ஒரு நாள் மலைப்பக்கமுள்ள ஒரு வழியே சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென (மின்னல் வெட்டி இடியிடித்து) மழை பொழிய ஆரம்பித்தது. அப்போது அம்மூவரும் அருகிலிருந்த ஒரு மலையின் குகைக்குள் நுழைந்தனர். காற்றும் மழையும் அதிகமாக இருந்தமையால்



அந்த மலையின் உச்சியிலிருந்த ஒரு பெரும் பாறாங்கல் உருண்டோடி வந்து அக்குகையின் வாயிலை அடைத்துக் கொண்டது. அக்கல்லை அகற்ற அவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அப்போது நீங்கள் மாதூய (இக்லாஸ்) எண்ணத்தோடு இறைவனுக்கென்றே செய்த நற்கிரியைகளின் மூலம்தான் இக்கல்லை அகற்ற முடியும் என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டனர். அதன்படி அவர்கள் தாம், தாம் செய்த நற்கிரியைகளை எடுத்துக்காட்டி இறைவனிடம் பிரார்த்திக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களில் ஒருவர், இறைவா! எனது பெற்றோர்கள் வயோதிகர்களாக இருந்தார்கள். எனக்குச் சிறு குழந்தைகளும் இருந்தனர். அவர்களைப் பராமரிப்பதற்காக எனது ஆடுகளைக் காலையில் காட்டுக்கு ஓட்டிச்சென்று மேய்த்து மாலையில் வீட்டுக்கு ஓட்டிவந்து, பால் கறந்து முதலில் எனது பெற்றோர்களுக்குப் புகட்டிய பின்புதான் என் குழந்தைகளுக்கு புகட்டுவது என் வழக்கமாக இருந்தது. ஒரு நாள் நான் ஆடுகளுக்குக் குளைகள் பறித்துக் கொடுக்க மரங்களை தேடித் தேடி அலைந்து வெகுதூரம் சென்று விட்டேன். அதனால் மாலை வெகுநேரஞ்சென்று வீடு திரும்பினேன். வழமைப்படி பால் கறந்து பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு என் பெற்றோர்களுக்குப் புகட்டச் சென்றேன். ஆனால் அவர்கள் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை எழுப்பி தூக்கத்தை கெடுக்க நான் விரும்பவில்லை. அதனால் பால் பாத்திரத்தைக் கையில் வைத்தபடி அவர்களின் தலைமாட்டில் நின்ற வண்ணம் அவர்கள் விழிப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்களுக்கு புகட்டாமல் என் குழந்தைகளுக்குப் புகட்ட விரும்பவில்லை. குழந்தைகளெல்லாம் பசி தாங்காமல் என்னைச் சுற்றி கதறி அழுதுகொண்டிருந்தார்கள். அதிகாலை ஆனதும் இருவரும் விழித்தெழுந்தார்கள். முதலில் அவர்களுக்கு பாலைப் புகட்டிவிட்டு, பின்பு என் குழந்தைகளுக்கும் புகட்டினேன்.

இறைவா! அவ்வாறு நான் என் பெற்றோர்களுக்குச் செய்த பணிவிடை உன் திருப்தியையும் பொருத்தத்தையும் நாடியேதான் என்பது உனக்குத் தெரியும். ஆகையால் உனது கிருபை கொண்டு இப்பாறாங்கல்லை அகற்றி எங்களைக் காப்பாற்றியருள்வாயாக என்று பிரார்த்தித்தார். அப்போது அப்பாறாங்கல் (அவர்கள் வெளியேறமுடியாத அளவு) கொஞ்சம் அகன்றது.

மற்றொருவர், இறைவா! எனது சிறிய தந்தைக்கு அழகிய மகள் ஒருவள் இருந்தாள். அவளை யாவற்றைக் காணவும் நான் மிகவும் நேசித்தேன். ஒரு நாள் அவளை இச்சைக்கு இசையும்படி அழைத்தேன். ஆனால் அவள் மறுத்து விட்டாள். சில வருஷங்களுக்குப் பிறகு பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அவள் என்னிடம் வந்து உதவி தேடினாள். என் இச்சைக்கு நீ இசைந்தால் உனக்கு உதவி செய்கிறேன் என்று கூறினேன். அவளும் சம்மதித்தாள். எனவே அவளுக்கு 120 தங்கக்காசுகள் கொடுத்து என் இச்சையைப் பூர்த்தி செய்ய அவளின் இரு கால்களுக்குமிடையில் உட்கார்ந்தேன். அப்போது அவள் "அல்லாஹ்வின் அடியானே! அல்லாஹ்வைப் பயந்துகொள். உரிமையின்றி என் கன்னிப்பருவத்தைக் களங்கப்படுத்தி விடாதே" என்று கூறினாள். அல்லாஹ் என்ற நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் நான் நடுநடுங்கிக் கொடுத்த தங்கக்காசுகளையும் வாங்காமல் (துற்செயலை விட்டும்) எழுந்து வந்துவிட்டேன்.

இறைவா! உன் கோபத்தையும் தண்டனையையும் பயந்துதான் அவ்வாறு என் இச்சையை நிறைவேற்றாமல் அத்தீய செயலை விட்டு விலகினேன் என்பது உனக்குத் தெரியும். எனவே, உனது கிருபை கொண்டு இப்பாறாங் கல்லை அகற்றி அருள்புரிவாயாக என்று பிரார்த்தனை புரிந்தார். உடனே அக்கல் கொஞ்சம் அகன்றது. ஆயினும் வெளியேற முடியாது.

மூன்றாமவர், இறைவா! நான் எனது தொழிற்சாலையில் பல வேலையாட்களிடம் வேலை வாங்கினேன். எல்லாருடைய



கூலியையும் கொடுத்து விட்டேன். ஆனால் ஒருவர் மட்டும் தனது கூலியை வாங்காமல் சென்றுவிட்டார். நான் அவருடைய கூலியை எனது வியாபாரத்தில் சேர்த்துப் பெருக்கி விருத்தி செய்து பல ஒட்டகங்களையும் ஆடு மாடுகளையும், அவைகளை மேய்ப்பதற்குப் பல அடிமை களையும் சேகரம் செய்து வைத்திருந்தேன். பல வருஷங் களுக்குப் பின் ஒருநாள் அந்த வேலைக்காரர் என்னிடம் வந்து அல்லாஹ்வின் அடியாரே! எனக்குத் துரோகஞ் செய்யாமல் அல்லாஹ்வைப் பயந்து எனக்குச் சேரவேண்டிய கூலியைக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டார். அப்பொழுது நான் இதோ இந்த ஒட்டகங்கள், ஆடுகள், மாடுகள் இந்த அடிமைகள் எல்லாம் உன் கூலியின் மூலம் பெருகியவைகளாகும். ஆதலால் அனைத்தையும் ஏற்றுக்கொள் என்று கூறினேன். அதற்கவர் என்னைப் பரிகாசமா செய்கிறீர்? எனக் கேட்டார். இல்லை உம்மைப் பரிகாசம் செய்யவில்லை. இவைகள் எல்லாம் உமது உடமைகள்தான். இதில் பொய் ஒன்றுமில்லை என்று நான் கூறினேன். அதன்படி அவர் அனைத்தையும் ஒப்புக் கொண்டார்.

இறைவா! அந்தக் கூலிக்காரரின் கூலியை அபகரிக்காமல் அதைப் பெருகச் செய்து பாதுகாத்து வைத்திருந்து அவ் வேலைக்காரரிடம் ஒப்படைத்தது உன்னைப் பயந்தும், உன் திருப்தியை நாடியுமேதான் என்பது உனக்குத் தெரியும். ஆகையால் உனது கிருபைகொண்டு இப்பாறாங்கல்லை அகற்றி எங்களைக் காப்பாற்றுவாயாக! என்று பிரார்த்தனை செய்தார். உடனே இறைவன் அப்பாறாங்கல்லை பூரணமாக அகற்றிக் காப்பாற்றினான். அவர்கள் வெளியே வந்து தங்கள் இல்லம் அடைந்தார்கள். அவர்களால் அசைக்க முடியாத அப்பாறாங்கல்லை அவர்களின் மாதூய எண்ணத்தின் சக்தி அசைத்துவிட்டது என்பதை இச்சம்பவம் துலக்குகிறது. என்னே மாதூய எண்ணத்தின் மாபெரும் சக்தி.

*— ரியாளுஸ் ஸாலிஹீன்.*

## 25. ஆபத்துக்கள் இறங்கிவிடும்

எனது உம்மத்தோர்கள் பதினைந்து வகையான காரியங்களைச் செய்வார்களானால், அவர்கள்மீது பற்பல ஆபத்துக்களும், முஸீபத்துக்களும் இறங்கிவிடுமென நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

1. அமானிதப் பொருட்களைக் கொள்ளைப் பொருட்களாக பாவித்து அதற்குரியவரிடம் கொடாமல் வைத்துக் கொள்வது. 2. ஜக்காத் கொடாமல் (தன் மீது கடனாகவே) வைத்துக் கொள்வது. 3. ஆடவர்கள் பெண்களுக்கு வழிபட்டு நடப்பது. 4. பெற்றோர் சொல் கேளாமல் மாறுபட்டு நடப்பது. 5. மஸ்ஜிதுகளில் உலக விவகாரங்களைப் பேசுவது, கூச்ச லிட்டுப் பேசுவது. 6. தாழ்ந்த மிக அற்பமானவன் மக்களுக்குத் தலைவனாக இருப்பது. 7. மறைமுகமாகக் குடிக்க விலக்கப் பட்ட மதுவை பகிரங்கமாகக் குடிப்பது. 8. ஒருவனுக்கு அவனின் அக்கிரமத்தை பயந்து சங்கை செய்வது. 9. விலக்கப் பட்ட பட்டு பட்டாடைகள் ஆண்கள் அணிவது. 10. பெற்றோர் களை நோவினை செய்வது. 11. சங்கீதக்கருவிகளை தயார் செய்து அதை பரப்புவது. 12. உற்ற நேயர்களை கண்ணியப் படுத்தாமலிருப்பது. 13. டோலக், மிருதங்கம், ஆர்மோனியம், மேளதாளம் அடிப்பது. 14. விலக்கப்பட்ட விபச்சாரத்தை விரும்பிச் செய்வது. 15. பின்னோர்கள், முன்னோர்களை ஏசுவது.

## 26. அல்லாஹ்வின் அர்ஷின் நிழலை அடைவோர்

1. நீதி நேர்மையோடு ஆட்சிபுரியும் அரசன். 2.வல்லோனின் வணக்கத்திலே வளர்ந்தோங்கிய வாலிபன்.



3. தனித்திருந்து தனியோனை நினைத்து உருகி அழுதவர். 4.பள்ளியை விட்டு வெளியே சென்றபின் அதன் பக்கமே தன் இதயத்தை இணைந்ததாக்கிக் கொண்டவர். 5. தனது இடக்கரம் அறியாவண்ணம் வலக்கரத்தால் தர்மம் செய்தவர். 6.இறைவனுக்கென்றே ஒருவருக்கொருவர் நேசங்கொண்ட இருவர். 7. அழகிய மங்கையொருவள் தனது இச்சையைப் பூர்த்தி செய்ய அழைத்தபோது அல்லாஹ்வை அஞ்சி விலகிக் கொண்டவர். 8. குளிர்காலத்திலும் தொழுகைக்காக குளிர்ந்த தண்ணீரில் ஒலுச்செய்கிறவர். 9. கடினமான 'கும்' இருட்டையும் பொருட்படுத்தாமல் தொழுகைக்காகப் பள்ளிக்குச் செல்கிறவர். 10. பசித்தோருக்கு ஆகாரம் கொடுத்து பசியாற்றுகிறவர்.

11. தனது இஸ்லாமியச் சகோதரனுக்கு நிகழ்ந்த கஷ்ட நஷ்டங்களை அகற்றியவர். 12. சொல்லிலும் செயலிலும் திரு நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தைக் கடைப்பிடித்து நடந்தொழுகியவர். 13. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்லுகிறவர். 14. கடனாளிக்கு அவகாசம் அளித்தவர், அல்லது கடன் வாங்காமல் மன்னித்தவர். 15.இறைவனின் பொருத்தத்தை நாடி ஐவேளையும் பாங்கு சொல்லும் முஅத்தின் (மோதினார்) 16. ஜிஹாதுக்குச் செல்வோருக்கு உதவி செய்கிறவர். 17. குர்ஆன்ஷரீபை மனனம் செய்து அதன் போதனைப்படி நடப்பவர். 18. திரு மக்காநகர் சென்று ஹஜ்ஜுச் செய்த ஹாஜி. 19.பந்துமித்திரர்களைச் சேர்த்து வாழ்கிறவர். 20. அனாதை களையும், விதவைகளையும் ஆதரிப்பவர்.

21. பசிதாங்காமல் பட்டினியால் மரணித்தவர். 22.கவலை உடையோரின் கவலையை நீக்கியவர். 23.நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுப்பவர். 24. நண்பர் களின் சுகதுக்கங்களில் பங்கு கொள்கிறவர். 25. தன் புருஷன் இறந்தபின் தன் பிள்ளைகளை வளர்ப்பதற்காகப் பொறுமை யுடன் கஷ்டங்களை அனுபவிக்கும் விதவை. 26. அனாதை களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் செய்கிறவர்.

27.தனது பொருளின் உண்மை நிலையைக் கூறி விற்பனை செய்யும் வியாபாரி. 28. நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்கள். 29. தனக்கு விருப்பம் உள்ளதையே பிறருக்கும் விரும்புகிறவர். 30. இறைவனின் சிருஷ்டிகளுக்கு நன்மையே செய்கிறவர்.

31. இறைவனின் அச்சத்தால் உருகி, உருகி மெலிந் தவர். 32. இறைவனால் விலக்கப்பட்டவைகளை விட்டும் தனது கண்களைப் பாதுகாத்துக் கொண்டவர். 33. எவரின் இழிச்சொல்லையும், பழிப்பையும் பாராமல் தீனுக்கு ஊழியம் செய்கிறவர். 34. வட்டி இலஞ்சத்தின் பொருட்களை உண்ணாதவர். 35. தொழுகைக்காகவும் திக்ருக்காகவும் நேரங்களை கணித்து அதன்படி நடக்கிறவர். 36. வியாதியஸ் தர்களிடம் சென்று ஷேமம் விசாரிப்பவர். 37. ஜனாஸாவுடன் சென்று அடக்கம் செய்யும்வரை கூடவே இருப்பவர். 38.அகமும்புறமும் பரிசுத்தத்தோடு இறைவனுக்கென்றே நேசங் கொள்கிறவர். 39. நபிலாயினும், பர்லாயினும் இறைவனுக் கென்றே நோன்பு நோற்பவர். 40. இதயத்தாலும், நாவாலும் இறைவனைத் தியானஞ்செய்து கொண்டிருப்பவர்.

41. விலக்கப்பட்ட சகல காரியங்களை விட்டும் விலகி பள்ளிக்குரிய காரியங்களில் ஈடுபட்டு பஜ்ருடைய நேரத்தில் இறைவனிடம் பிழைபொறுக்கத் தேடுகிறவர். 42. எவரைப் பற்றியும் கோள் சொல்லாமலும் பொறாமை கொள்ளாமலும் இருப்பவர். 43. பெற்றோர்சொல் பேணிப் பணிவிடை செய்து அவர்களின் பிரார்த்தனையைப் பெற்றவர். 44. குர்ஆன ஷரீபைத் திருத்தமாகக் கற்றுக் கொடுப்பவர். 45. எப்போதும தீனுடைய வேலையிலேயே ஈடுபட்டு, தீனின் பேச்சையே பேசுகிறவர். 46. "லா இலாஹ இல்லல்லாஹு" என்னும் கலிமாவைச் சதா சொல்லிக் கொண்டிருப்பவர். 47.ஒவ்வொரு மூச்சிலும், பேச்சிலும், செயலிலும் இறைவனை அஞ்சி நடப்பவர். 48. இறைவனின் பாதையிலே போர் புரிந்து உயிர் நீத்த (ஷுஹதா) வீரத்தியாகிகள். 49. இறைவனுக்காகவும்,



ஈமானைப் பாதுகாப்பதற்காகவும், (ஹிஜ்ரத்) சுயபதி விட்டும் அயல்பதி செல்கிறவர்.

இவர்கள் எல்லாம் மறுமையில் அல்லாஹ்வி அர்ஷுடைய நிழலில் இருப்பார்கள். *(முன்தஹல் மவாயி*

## 27. ஒவ்வொரு மூச்சுக்கும் இரு கேள்விகள் உண்டு

இரவு, பகலும் சேர்ந்து 24 மணி நேரங்கள் ஆகின்ற ஒவ்வொரு மனிதனும் 1 மணிக்கு 180 தடவை மூச்சு விட் மூச்சு வாங்குகிறான். இதன்படி 24 மணி நேரத்திலும் 432 தடவைகள் மூச்சு விட்டு, மூச்சு வாங்குகிறான்.

ஒவ்வொரு மூச்சுக்கும் இரண்டு கேள்விகள் கேட்கப்படு அதாவது மூச்சுவிடும்போது என்ன காரியம் செய் கொண்டிருந்தான். மூச்சு வாங்கும்போது என்ன காரிய செய்து கொண்டிருந்தான் என்று கேட்கப்படுவான் ஆகையால் நமது ஒவ்வொரு பேச்சையும், மூச்சையு வீணாகக் கழிக்காமல் தீனிலேயும், தியானத்திலேயும் கழிப்பது மிக்க அவசியமாகும். அதாவது தீனின் விஷயங்களைப் பேசுவதிலும், அவைகளைப் பிறருக்கு எடுத்துரைப்பதிலு திருமறையை ஓதுவதிலும், திக்ருச் செய்வதிலும் நல் பேச்சுக்களைப் பேசுவதிலும் அவைகளைப் பிறருக்கு சொல் வதிலும், தீய காரியங்களைத் தடுப்பதிலும் நமது மூச்சையும் பேச்சையும் கழிக்க வேண்டும். வீணான விஷயங்களில் மூச்சைக்கழிப்பதால் பற்பல ஆபத்துக்கள் விளைகின்றன. ஏனெனில் "எவர் வீணான விஷயங்களை அதிகம் பேசுகிறாரோ அவருக்குப் பாவம் அதிகமாகிறது. எவரது பாவம் அதிகமாகிறதோ அவரது இதயம் மரணித்து விடுகிறது. எவரது இதயம் மரணித்து விடுகிறதோ அவர் நரகம்

அடைவார்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

ஒரு நகரத்தில் நபிமார்களைப் போன்று அமல் செய்து கொண்டிருந்த 18000 தவசீலர் (ஆபிதீன்) கள் இருந்தார்கள். ஆயினும் அவர்களையும், அந்த நகரவாசிகளையும் அழித்து நாசமாக்கும்படி இறைவன் மலக்குகளுக்கு உத்தரவிட்டான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சமயம் கூறிய போது அங்கு குழுமியிருந்த ஸஹாபாக்கள் ஏன் அவ்வாறு உத்தரவிட்டான் என்று கேட்டார்கள். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஆபிதீன்கள் நல்ல விஷயங்களைப் பிறருக்கு சொல்லாமலும், தீயகாரியங்களை விட்டுத் தடுக்காமலும் இருந்தார்கள். அதனால் தான் இறைவன் அவ்வாறு கட்டளை இட்டான் என்று கூறினார்கள். *(துர்ரதுல் வாயிளீன்)*

## 28. எட்டுச் சொர்க்கமும் ஏழு நரகமும் யார் யாருக்கு?

இறைவன் மானிடவர்க்கத்தை எல்லா சிருஷ்டிகளைக் காணவும் சீரிய முறையில் சிருஷ்டித்து அந்தச் சீரிய தன்மை சீர் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகப் பகுத்தறிவையும் கொடுத்தருளியுள்ளான். அப்பகுத்தறிவின் மூலம் நன்மை தீமைகளை ஆய்ந்தறிந்து நன்மைகளைக் கடைபிடித்து நடப்ப வர்களுக்கு சொர்க்கத்தையும், தீமைகளைக் கடைபிடிப்பவர் களுக்கு நரகத்தையும் கொடுப்பதாக கூறியுள்ளான். அவைகள் சுருக்கமாகக் கீழே வரையப்படுகின்றன.

### எட்டு சொர்க்கங்கள் யார் யாருக்கு?

1. தாருல் ஜலால் என்னும் சொர்க்கம். இதில் நபிமார்கள், ரசூல்மார்கள், ஷுஹதாக்கள், கொடையாளிகள் புகுவார்கள். 2. தாருஸ் ஸலாம் என்னும் சொர்க்கம். இதில்



சம்பூரணமாக ஒலுச்செய்து பயபக்தியோடு தொழுதவர்கள் புகுவார்கள். 3. ஜன்னத்துல் மஃவா என்னும் சொர்க்கம். இதில் ஜக்காத் கொடுத்தவர்கள் புகுவார்கள். 4. ஜன்னத்துல் குல்து என்னும் சொர்க்கம். இதில் நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுக்கும் புனித வேலையிலே ஈடுபட்டவர்கள் புகுவார்கள். 5. ஜன்னத்துன்னயீம் என்னும் சொர்க்கம். இதில் தமது மனோ இச்சைகளை அடக்கி ஒடுக்கி நேர்மையை கடைபிடித்தவர்கள் புகுவார்கள். 6. தாருல்கரார் என்னும் சொர்க்கம். இதில் ஹஜ்ஜு உம்றாச் செய்தவர்கள் புகுவார்கள். 7. ஜன்னத்துல் பிர்தவ்ஸ் என்னும் சொர்க்கம். இதில் முஜாஹிதீன் (அறப்போர் வீரர்)கள் புகுவார்கள். 8.ஜன்னத்துல் அத்னு என்னும் சொர்க்கம். இதில் விலக்கப் பட்டவைகளை அனுபவிக்காமலும் பாராமலும் அதைத் தொடாமலும் தம்மைப்பாதுகாத்து பெற்றோருக்கு வழிபட்டு நடந்தும் பந்துக்களைச் சேர்த்து வாழ்ந்தும் மற்றும் எல்லா நற்கிரியைகளையும் செய்தவர்கள் புகுவார்கள்.

### ஏழு நரகங்கள் யார் யாருக்கு?

1. ஜஹன்னம் என்னும் நரகம். இதில் உம்மத்தே முஹம்மதிய்யா, முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தோரில் உள்ள பெரும்பாவிகள் புகுவார்கள். 2. லழா என்னும் நரகம். இதில் முனாபிக்கீன்கள் புகுவார்கள். 3. சக்கர் என்னும் நரகம். இதில் யூதர்களும் நஸாராக்களும் புகுவார்கள். 4.ஹுத்தமா என்னும் நரகம். இதில் மஜூஸி (நெருப்பை வணங்குகிறவர்)கள் புகுவார்கள். 5. ஜஹீம் என்னும் நரகம். இதில் விக்கிரக ஆராதனைக்காரர்கள் புகுவார்கள். 6. சஈர் என்னும் நரகம். இதில் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார் புகுவார்கள். 7. ஹாவியா என்னும் நரகம். இதில் ஜின்களும் ஷைத்தான்களும் புகுவார்கள். மற்றும் அல்லாஹ், ரசூலையும், திருமறையையும் பொய்யாக்கி வைப்பவர்களும் இன்னும் மனோ இச்சைப்படியெல்லாம் நடப்பவர்களும் புகுவார்கள்.

# 29. பிரார்த்தனை ஏற்கப்படும் நாட்களும், இரவுகளும், இடங்களும்

1. ரமளான் மாதம் 27–ம் (லைலத்துல்கத்ரி) இரவு. 2.முஹர்ரம் மாதம் ஒன்பதாம் நாள். 3. பிரதி வெள்ளிகிழமை தோறும். 4. நடுநிசி முன்னிரவு, பின்னிரவின் இறுதி. 5 ஸஹர்நோன்பு நோற்கும் நேரம். 6. ஐவேளைக்கும் பாங்கு சொன்னதன் பின். 7. பாங்கு இகாமத்திற்கிடையில். 8.பாங்கில் ஹய்ய அலஸ்ஸலாத், ஹய்ய அலல்பலாஹ் என்று சொல்லும் நேரத்தில். 9. போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கும் சமயம். 10. ஐவேளையும் பர்லுத் தொழுகைக்குப் பின்.

11. ஸஜ்தாச் செய்யும் சமயம். 12. குர்ஆன் ஷரீபைப் பூராவையும் ஓதிமுடித்தபின். 13. ஜம்ஜம் தண்ணீரை குடிக்கும் சமயம். 14. மய்யித்தின் அருகே இருக்கும் சமயம். 15. அதி காலை கோழிகூவுஞ் சமயம். 16. முஸ்லிம்கள் எல்லோரும் ஒன்று கூடும் சமயம். 17. இமாம் வலழ்ழால்லீன் என்று ஓதும் சமயம். 18. ஒருவர் மரணமாகும் போது கண்களைக் கசக்கி மூடும் சமயம். 19. மழை பெய்யும் சமயம். 20.கஃபத்துல்லாஹ்வை தவாபு செய்யும் சமயம்.

21. சூரத்துல் அன்ஆம் என்னும் அத்தியாயத்தை ஓதும் போது அல்லாஹ் என வரும் இரண்டு இடத்திற்கும் இடையில். 22. கஃபாவில் முல்தஜிம் என்னும் இடத்தில். 23. 'ஜம்ஜம்' கிணற்றின் அருகில். 24. ஸபா, மர்வா குன்றுகளின் மீது. 25.மீஜாபே ரஹ்மத்திற்குக் கீழ் 26. ஸபா, மர்வாவிற்கு இடையில் தொங்கோட்டம் ஓடவேண்டிய இடத்தில். 27.கஃபாவில் மகாமே இப்ராஹீம் என்னும் இடத்தில். 28.அரபாத் மைதானத்தில் 29. முஸ்தலிபா என்னும் இடத்தில். 30. மினாவில் கல்லெறியும் மூன்று இடங்களில்.



31. திருநபியின் ரவ்ளாவிற்கு அருகில் 32.கஃபத்துல்லாஹ்வின் உள்ளே. 33. துல்ஹஜ்ஜுமாதம் ஒன்பதாம் நாள். 34. முஹர்ரம் மாதம் பத்தாம் நாள். 35. ரஜப் மாதம் இருபத்தி ஏழாம் நாள் இரவு 36. பத்ருயுத்தம் நடந்த ரமளான் மாதம் 17ம் நாள். 37. ஷஃபான் மாதம் பதினைந்தாம் (பராஅத்) இரவு. 38. இரு பெரு நாட்களின் இரவு 39. துல்ஹஜ்ஜு மாதம் முதல் பத்து இரவுகள். 40.அய்யாமுத்தஷ்ரீக், துல்ஹஜ்ஜு மாதம் 10,11,12 ஆகிய மூன்று நாட்கள். (பளாயிலே துஆ).

# 30. பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவோர்

கீழ்க்காண்பவரின் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் என்று ஹதீதிலே கூறப்பட்டுள்ளது.

1. அல்லற்பட்டு, அவதியுறும் நிலைமையுடையவர். 2.அநீதத்திற்குள்ளாக்கப்பட்டவர். 3. பிள்ளைகளுக்காக பெற்றோர்களின் பிரார்த்தனை. 4. நீதியும், நேர்மையும் உடைய அரசன். 5. பரிசுத்தவான்களான (ஸாலிஹீன்கள்) நல்லோர்கள். 6. சொல்லாலும், செயலாலும் பெற்றோர் களுக்குப் பணிவிடை செய்யும் பிள்ளைகள். 7. ஊர்விட்டு ஊர் செல்லும் பிரயாணிகள். 8. நோன்பு திறக்கும்போது நோன்பாளிகளின் பிரார்த்தனை. 9. ஒரு முஸ்லிம், மறைவாக இருக்கும் மற்றொரு முஸ்லிமுக்குச் செய்யும் பிரார்த்தனை. 10. அக்கிரமத்தை நாடாமலும் மித்திர துரோகம் செய்யாமலும், நான் பிரார்த்தனை செய்தேன்; அதை இறைவன் ஏற்கவில்லை என சொல்லாமலிருப்பவர். 11. ஹாஜிகள் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பி வந்து வீடு புகுமுன் செய்யும் பிரார்த்தனை. 12. தஹஜ்ஜுத் நேரத்தில் தொழுது பிரார்த்தனை செய்கிறவர்.

*(பளாயிலேதுஆ)*

# 31. பிஸ்மில்லாஹ்வின் அற்புத சக்தி

1. எவர் தமது ஒவ்வொரு செயல்களின் ஆரம்பத்தில் "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று கூறி ஆரம்பிக்கிறாரோ அவர் ஈருலகிலும் நற்பாக்கியம் பெற்ற வராவார். 2. பிஸ்மில்லாஹ் சொல்லி ஆரம்பிக்காத ஒவ்வொரு காரியமும் அல்லாஹ்வின் அருளை விட்டும் தூரமானதாகும்.

3. பிஸ்மில்லாஹ் முதன் முதலில் இறங்கியருளப்பட்ட சமயம் அதன் பயங்கரத்தால் மலைகளெல்லாம் நடுநடுங்கி ஆட்டங்கொடுத்து விட்டன. 4. எவர் தனது வழக்கத்தில் அதிகமாக பிஸ்மில்லாஹ் சொல்வதைக் கடைப்பிடித் திருக்கிறாரோ அவர் நரகில் பிரவேசிக்கமாட்டார். 5. எவர் அதிகமாக பிஸ்மில்லாஹ்வை ஓதுகிறாரோ அவர் வானவர்களிடமும், ஜனங்களிடமும் கண்ணியமானவராகவும், கம்பீரமானவராகவும் ஆகிவிடுகிறார். 6. பிஸ்மில்லாஹ் சொன்ன காரணத்தாலேயே இறைவன் ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களின் தவ்பாவை ஏற்றுக்கொண்டான். 7. பிஸ்மில்லாஹ் வைச் சொன்ன காரணத்தினாலேயே ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்களின் கப்பல் ஜூதி என்னும் மலையை அடைந்து ஈடேற்றமடைந்தது. 8. பிஸ்மில்லாஹ்வைச் சொன்ன காரணத்தினாலேயே ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் நெருப்பு குளிர்ச்சி அடைந்தது. 9. பிஸ்மில்லாஹ்வைச் சொன்ன காரணத்தினாலேயே ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னை விட்டும், அவனின் சேனையை விட்டும் ஈடேற்றமடைந்தார்கள். 10. பிஸ்மில்லாஹ் சொன்னதினால் தான் ஹஜ்ரத் சுலைமான் (அலை) அவர்களின் அரசாங்கத்தை இறைவன் பலப்படுத்தி, மனு, ஜின்னுகளையும், பறவை இனங்களையும் அவர்களுக்கு வழிப்படச் செய்தான்.

11. பிஸ்மில்லாஹ்வின் காரணத்தால்தான் ஹஜ்ரத் ஈஸா (அலை) மரணித்தோரை உயிர் பெற்று எழச் செய்தார்கள்.



12.பிஸ்மில்லாஹ்வின் காரணத்தால்தான் நமது நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மாபெரும் வெற்றி பெற்றார்கள். 13. ஒருவர் எந்த நோக்கத்திற்காக பிஸ்மில்லாஹ் ஓதுகிறாரோ அவர் அந்த நோக்கத்தை அடைவார். 14. எவர் இரவில் தூங்குவதற்கு முன் பிஸ்மில்லாஹ்வை பதினொரு தடவை ஓதிக்கொண்டு தூங்கு கிறாரோ அவர் ஷைத்தான், திருடனுடைய தீங்கை விட்டும், திடீர் மரணத்தை விட்டும் பாதுகாக்கப்படுவார். 15. ஒருவர் 50 தடவை பிஸ்மில்லாஹ்வை ஓதிக்கொண்டு ஏதேனும் ஒரு அக்கிரமக்காரனிடமோ அல்லது கல்நெஞ்சம் படைத்த கஞ்சனிடமோ செல்வாரானால் அவனின் மனதை இறைவன் மாற்றிவிடுவான். 16. ஏதாவது ஒரு வேதனைக்கு மூன்று நாள் தொடராக பிஸ்மில்லாஹ்வை நூறு, நூறு தடவை ஓதி ஊதி வந்தால் அவ்வேதனை நீங்கும்.

17. எவர் பிஸ்மில்லாஹ் சொல்லி வீட்டினுள் புகுகிறாரோ, அல்லது உணவு உண்கிறாரோ, அல்லது தண்ணீர் குடிக்கிறாரோ அல்லது நித்திரை செய்கிறாரோ அவைகளில் ஷைத்தான் சம்பந்தப்படமாட்டான். பிஸ்மில்லாஹ் சொல்லவில்லையானால் அவைகளில் ஷைத்தானும் கூட்டாகிக் கொள்கிறான். 18. எவர் பிஸ்மில்லாஹில்லதீ லாயளுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் பில் அர்ளி வலா பிஸ்ஸமாயி யாஹய்யு யாகையூம் என்று கூறிச் சாப்பிடுகிறாரோ அவருக்கு அந்த ஆகாரம் எவ்விதத் தீங்கும் செய்யாது. அதில் நஞ்சு கலந்திருந்தாலும் சரியே. 19.ஏதேனும் கஷ்டத்தில் சிக்கிய ஒருவர் வெள்ளிக்கிழமை அஸருக்குப் பின் ஒலுச் செய்து உள்ளச்சத்தோடு யா அல்லாஹு, யா ரஹ்மானு, யா ரஹீம் என்று சூரியன் மறையும் வரை ஓதி அல்லாஹ் இடத்தில் கெஞ்சி அழுது துஆச் செய்வாரானால் அல்லாஹ் அவரின் கஷ்டத்தை நீக்குவான். 20. எவர் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹி என்று பத்து முறை கூறுகிறாரோ அவர் பாவத்தை விட்டும்,

பரிசுத்தமடைந்து விடுவதோடு எழுபது வியாதிகளை விட்டும் பாதுகாக்கப்படுகிறார். 21. எவர் பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி லா ஹவ்ல வலா குவ்வத என்று கூறி வீட்டை விட்டு கிளம்புகிறாரோ அவர் ஷைத்தானின் தீங்கை விட்டும் பாதுகாக்கப்படுவார்.

22. பக்கர் பின் அப்துல்லாஹி முஜ்னி கூறுகிறார்கள்: நான் பெருமானாரிடம் சென்று அல்லாஹ்வின் தூதரே! எனது பொருள் விருத்தியடைவதில்லையே நான் என்ன செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டேன். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், கீழ்க்கண்டவாறு ஓதி வரச் சொன்னார்கள். அவ்விதமே ஓதி வந்தேன். சில தினங் களுக்குள் என் பொருள் பெருகிவிட்டது. 'பிஸ்மில்லாஹி அலாநப்ஸீ வஅலா அஹ்லீ வமாலீ அல்லாஹும்மர்ளனீ பிமாகளைத்த வஆபினீ பிமா அப்கைத்த ஹத்தா லாஉஹிப்ப தஃஜீல மா அக்கர்த்த வமா தஃகீர மா அஜ்ஜல்த்த' 23. மது அருந்தும்போதோ, ஹறாமானவைகளைச் சாப்பிடும்போதோ விபச்சாரம் செய்யும்போதோ ஒருவர் பிஸ்மில்லாஹ் சொல் வாரானால் அவர் காபிராகிவிடுவார். 24. பிஸ்மில்லாஹ்வின் சிறப்புக்களைக் கேட்டு அநேகர் சந்தோஷமடைகின்றனர். அதுவே போதுமெனக் கருதி, ஐவேளைத் தொழுகையினையும் விட்டு விடுகின்றனர். ஹறாமான பொருட்களை உண்கிறார்கள். போதை வஸ்துக்களை உபயோகிக்கிறார்கள். பெரும்பாவமான காரியங்களைச் செய்கிறார்கள். ஷிர்க், பித்னா காரியங்களைச் செய்கிறார்கள். உண்மையில் இறை வனின் திருநாமத்தின் சிறப்பிற்கு அவர்களின் இதயங்களில் இடமிருந்தால் அவ்வாறு செய்வார்களா? எனவே எவர்கள் மார்க்க விதிகளைப் பேணி நடக்கிறார்களோ அவர்கள்தான் பிஸ்மில்லாஹ்வின் பலனை அடையமுடியும் என்பதைச் சிந்தனையில் இருத்திக் கொள்ளவேண்டும்.

*(முன்தஹல் மவாயிஜ்)*



# 32. இப்படி ஒரு காலம் வரும்; அந்தக் காலத்திலே!

ஏ அலீயே! எனது உம்மத்தோருக்கு விரைவில் ஒரு காலம் வரும்! அந்தக் காலத்திலே ஜனங்கள் இப்படி இருப்பார்கள்.

1. ஜனங்கள் பெருமை, அகம்பாவம், ஆணவம் உள்ளவர்களாக இருப்பார்கள். 2. கல்வி கற்பதை வெறுத்து அறிவிலிகளாக இருப்பார்கள். 3. அநீதம், அக்கிரமம் அழிச் சாட்டியம் செய்வதையே விரும்புவார்கள். 4. நல்லவைகளைக் கெட்டவைகளாகவும், கெட்டவைகளை நல்லவைகளாகவும் கருதுவார்கள். 5. முஸ்லிம்கள் இழிவாகவும், காபிர்கள் சங்கைவான்களாகவும் இருப்பார்கள். 6. முஸ்லிம்களின் மத்தியில் ஒற்றுமை குன்றி, வேற்றுமை வேரூன்றி இருக்கும். 7. பள்ளிவாசல்கள் நடைபாதைகளாகவும், தூங்கும் இடங்களாகவும், சர்ச்சை செய்யும் ஸ்தலங்களாகவும் இருக்கும். 8. ஜனங்கள் ஒருவருக்கொருவர் சண்டையும், சர்ச்சையும் செய்து கொண்டு சபித்துக் கொள்வார்கள். 9. கடமையான ஐவேளைத் தொழுகையினையும் அலட்சியமாக விட்டுவிடு வார்கள். 10. ஏழைகள் ஏளனமாகவும் இழிவாகவும் கருதப்படு வார்கள். 11. சிறுவர்களின் உள்ளங்களிலே பெரியோர் களைப் பற்றிய பயம் இராது. 12. பொறாமை அதிகமாகும். அதனால் ஒரு மகன் தன் தகப்பன் இறப்பதை எதிர்பார்ப்பான். 13. உண்மை குறைந்து விடும். பொய் அதிகமாகி விடும். 14. மது அருந்தும் பழக்கம் சர்வ சாதாரணமாகி விடும். 15. வட்டி, இலஞ்சம் வாங்குவது சகஜமாகிவிடும்.

16. ஆண்கள் நாணப்படுவார்கள், பெண்கள் நாணப்படமாட்டார்கள். 17. அக்கிரமக்காரனுக்கு உதவியும் ஒத்தாசையும் செய்வார்கள். யாசிப்போரை விரட்டி

விடுவார்கள். 18. மோசடி அதிகமாகும், நம்பிக்கை குறைந்து விடும். 19. பாவமறியாப் பத்தினிப் பெண்கள் விபச்சாரப் பழிசுமத்தப்படுவார்கள். 20. தொழுகையின் நேரங்களில் பள்ளிகள் பூட்டப்படும். 21. ஒரு தாசி தன் மகளைச் சிங்காரிப்பாள். 22. அந்தக் காலத்தில் வான் பொழியாது. பூமி முளைக்காது. 23. சிறியோர் பெரியோரை கண்ணியப் படுத்தமாட்டார்கள். பெரியோர்கள் சிறியோர்கள் மீது இரக்கங் கொள்ளமாட்டார்கள், நல்லொழுக்க சீலர்கள் இழிவாகக் கருதப்படுவார்கள். அந்தக் காலத்திலே ஒரு வியாபாரி தன் வியாபாரத்தின் மூலமும், ஒரு விவசாயி தன் விவசாயத்தின் மூலமும் ஒரு செல்வந்தர் தன் செல்வத்தின் மூலமும் சந்தோஷ மடைய மாட்டார்கள். 24. எங்கும் குழப்பமும் புரட்சியும் பரவி நிற்கும். அதனால் என்ன நிகழுமோ என்ற பயத்தால் எவருக்கும் மன ஓர்மை இராது.

25. தர்க்கம் புரிவதற்கும், திறமையைக் காட்டுவதற்குமே கல்வி கற்பார்கள். 26. முஃமின் உள்ளங்களிலே ஈமான் அகன்று காணப்படும். 27. விபச்சாரம் செய்துவிட்டு அதை பிறரிடம் பெருமையாகக் கூறுவார்கள். 28. உண்மையைச் சொல்கிறவர்கள் கோபத்திற்கு உள்ளாவார்கள். 29. குர்ஆன் ஷரீபைச் சங்கீதம் பாடுவதைப் போன்று இராகமாக ஓதுவார்கள். அதனால் குர்ஆன் ஷரீப் இறைவனின் வாக்கியம் என்பது அவர்களின் உள்ளத்தை விட்டும் நீங்கிவிடும். 30. ஏ அலீயே! எனது இந்த உபதேசத்திலே உலகம் முடியும்வரை நிகழப்போகும் சம்பவங்கள் அடங்கி இருக்கின்றன. ஆதலால் நீர் இதை நன்கு மனனஞ் செய்து மற்றவருக்கும் அறிவித்து விடுவீராக என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

*(வஸிய்யத்துன்னபி)*



# 33. நன்றி கெட்டால் நாசமே விளையும்

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

பனீ இஸ்ராயீல்களில் ஒரு குஷ்டரோகி, ஒரு வழுக்கைத்தலையன், ஒரு குருடன் ஆகிய மூவர் இருந்தார்கள். அவர்களை இறைவன் சோதிக்க நாடி அவர்களிடம் ஒரு மலக்கை அனுப்பி வைத்தான். அந்த மலக்கு முதலில் குஷ்டரோகியிடம் வந்து உனது விருப்பம் என்ன? எது தேவை என்று கேட்டார். அதற்கவர் எனது இந்த வியாதியின் காரணத்தால் ஜனங்களெல்லாம் என்னை வெறுக்கிறார்கள். கிட்ட நெருங்க விடுகிறார்களில்லை. ஆதலால் என் வியாதி நீங்கி என் மேனி நன்றாக வேண்டும் என்பதே என் விருப்பம் என்றார். உடனே அந்த மலக்கு அம்மனிதனின் மேனியைத் தடவினார். அதே நேரத்தில் அவரின் மேனியெல்லாம் அழகுள்ளதாகி விட்டது. பின்னர் உனக்கு எந்தப் பொருளின் மீது விருப்பம் எனக்கேட்டார். அதற்கவர் ஒட்டகத்தின் மீதுதான் விருப்பம் என்றார். அதற்கேற்ப ஒரு சினை ஒட்டகையை கொடுத்து அல்லாஹ் இதில் பரக்கத்துச் செய்வானாக எனக் கூறிச் சென்றார்.

பின்பு வழுக்கைத்தலையனிடம் வந்து, உனது விருப்பம் என்ன? என்றுக் கேட்டார். அதற்கவர் என் தலையில் உரோமம் முளைக்க வேண்டும்; அதுவே எனக்கு விருப்பம் என்றார். உடனே அந்த மலக்கு அம்மனிதனின் தலையைத் தடவினார். அதே நேரத்தில் தலையில் முடி முளைத்து நன்றாகி விட்டது. பின்பு உனக்கு எந்தப்பொருளின் மீது ஆசை? எனக் கேட்டார். அதற்கவர் எனக்கு பசுவின் மீது விருப்பம் என்றார். அதன்படி ஒரு சினைப்பசுவை கொடுத்து அல்லாஹ் இதில் பரக்கத்துச் செய்வானாக" என்று கூறிச் சென்றார்.

அதன்பின் குருடனிடம் வந்து, நீர் என்ன விரும்புகிறீர்? உமது தேவை என்ன என்று கேட்டார். அதற்கவர் இறைவன் என் கண்களை நன்றாக்க வேண்டும். நான் எல்லோரையும் பார்க்க வேண்டும்; இதுவே என் ஆசை என்றார். அதன்படி அம்மலக்கு அம்மனிதரின் கண்களைத் தடவினார். உடனே கண்தெரிந்தது. பின்பு உனக்கு எந்தப் பொருளின் மீது விருப்பம்? என்று கேட்டார். அதற்கவர், எனக்கு ஆட்டின் மீது தான் விருப்பம் என்றார். அதற்கேற்ப ஒரு சினை ஆட்டை கொடுத்து, "அல்லாஹ் இதில் பரக்கத்துச் செய்வானாக! என்று கூறிச் சென்று விட்டார். இம்மூவரின் ஒட்டகம், பசு, ஆடு ஆகியவைகள் குட்டிகள் ஈன்று பெருகி விட்டன.

பின்பு இறைவனின் உத்தரவுப்படி அந்த மலக்கு முன்பு வந்த ரூபத்தில் அந்த குஷ்டரோகியிடம் வந்து நான் ஒரு பரதேசி. பிரயாணத்திற்குரிய சாமான்கள் எல்லாம் முடிவடைந்து விட்டன. நான் என் ஊர் செல்வதற்கு அல்லாஹ்வையும், உன்னையும் தவிர வேறு வழியில்லை. ஆதலால் உனக்கு அழகிய மேனியையும் நிறத்தையும் கொடுத்த இறைவனின் பேரால் உன்னிடத்தில் ஒரு ஒட்டகம் கேட்கிறேன். கொடுப்பீரானால் அதன்மீது ஏறி என் ஊர் செல்ல வசதியாகும் எனக்கேட்டார். அப்போது அம்மனிதன் எனக்கு வேறு பல கடமைகளிருக்கின்றன. ஆதலால் உமக்குக் கொடுக்க வசதியில்லை; நீர் சென்று விடும் என்றுரைத்தான். அப்போது அம்மலக்கு, ஏ மனிதனே! உன்னை நான் அறிவேன். நீர் குஷ்டரோகியாக இருக்கவில்லையா? அதனால் ஜனங்களெல்லாம் உன்னை வெறுக்கவில்லையா? நீர் யாது மற்ற ஏழையாக இருந்தபோது இறைவன் உனக்கு இவ்வளவு பாக்கியங்களையும் கொடுக்கவில்லையா? என்று எடுத்துக் கூறினார். அதற்கவன் ஓஹோ! அப்படியா சொல்கிறீர்? இந்தப் பொருள்களெல்லாம் தலைமுறை தலைமுறையாக என்



மூதாதைகள் மூலம் கிடைத்தவைகள் என்றான். அதற்கு அந்த மலக்கு நீ பொய்யனாக இருந்தால் இறைவன் உன்னைப் பழையபடி ஆக்குவானாக என்று கூறினார்.

பின்பு வழுக்கைத்தலையனிடம் வந்து குஷ்டரோகியிடம் கேட்டது போலவே கேட்டார். அதற்கு அவனும் குஷ்டரோகி போலவே பதில் சொன்னான். அப்போது அம்மலக்கு நீ பொய்யனாக இருந்தால் இறைவன் உன்னை முன்புபோலவே ஆக்குவானாக என்று கூறினார்.

பின்பு குருடனிடம் வந்து, நானொரு வழிப்போக்கன்; பிரயாணச்சாமான்களெல்லாம் முடிந்து விட்டன. எனவே நான் எனது ஊர் செல்வதற்கு அல்லாஹ்வையும் உன்னையும் தவிர வேறு வழியில்லை. ஆதலால் எந்த இறைவன் உனக்கு மறுமுறையும் கண்ணுக்குப் பார்வையைக் கொடுத்தானோ அந்த • இறைவன் பேரால் ஆடு கேட்கிறேன். நீர் கொடுப்பீரானால், அதன் மூலம் நான் என் ஊர் செல்ல வழி ஏற்படும் எனக் கேட்டார். அப்போது அம்மனிதர், ஆம், நான் குருடனாக இருந்தேன். இறைவன் எனக்குப் பார்வையைக் கொடுத்து இவ்வளவு பாக்கியத்தையும் கொடுத்தான். ஆதலால் உமது மனம் விரும்பும் அளவு எடுத்துக்கொள்வீராக இறைவன் மீது ஆணையாக நான் உம்மைத் தடுக்கமாட்டேன் என உரைத்தார். அந்த மலக்கு "உமது பொருளை நீரே வைத்துக்கொள்ளும். எனக்குத் தேவையில்லை. இறைவன் உங்கள் மூவரையும் சோதிக்க நாடினான். சோதனை முடிந்து விட்டது" எனக்கூறிச் சென்று விட்டார்.

குறிப்பு:— முந்திய இருவரும் இறைவன் அளித்த பாக்கியங்களுக்கு நன்றி செய்யாததால் நாசமடைந்து பழைய நிலையை அடைந்தனர்; இறைவனின் அதிருப்திக்கும் ஆளாயினர். மூன்றாம் மனிதன் நன்றி மறவாமையால், அவனின் பொருட்கள் நிலைத்தன. இறைவனின் திருப்தியும் கிடைத்தது. நன்றி கெட்டால்

நாசமே விளையும் என்பதை இச்சம்பவம் துலக்குகிறதல்லவா? *(பிஹிஷ்தீ ஜேவர்)*

## 34. தவ்ராத் வேதத்திலே

1. இம்மையில் மறுமைக்குரிய சாதனங்களை தயாரித்துக் கொண்டவர் அல்லாஹ்வின் நெருங்கிய (அல்லது) விருப்பமான நண்பராவார். 2. கோபத்தை விட்டொழித்தவர் அல்லாஹ்வின் அண்மையில் இருப்பார். 3. இகவாழ்வின் இன்பங்களை விட்டொழித்தவர் பரலோகத்தில் பற்பல இன்பங்களை அடைவார். 4. பொறாமையை விட்டொழித்தவர், மக்களின் புகழைப்பெறுவார். 5. பதவி மோகத்தை விட்டொழித்தவர், இறைவனிடத்தில் கௌரவிக்கப்படுவார். 6.இம்மையில் பொருள் சேமிப்பதை விட்டொழித்தவர் மறுமையில் நல்லோர் குழுவில் நலமுடனிருப்பார். 7.இம்மையில் சண்டை சச்சரவுகளை விட்டொழித்தவர் மறுமையில் வெற்றி பெறுவார். 8. கஞ்சத்தனத்தை களைந்தவர், எல்லாச் சிருஷ்டிகளிடமும் மதிப்படைவார்; புகழப் படுவார். 9. இம்மையில் துன்புறுகிறவர், மறுமையில் இன்புறுவார். 10. இம்மையில் தகாத செயல்களையெல்லாம் விட்டொழித்தவர், மறுமையில் நபிமார்களுடனிருப்பார். 11.இம்மையில் தகாத பார்வையை விட்டவரின் கண்களை, மறுமையில் இறைவன் சொர்க்கத்தில் சுகன்டியாக்கி வைப்பான். 12. இம்மையில் ஏழ்மையைக் கடைபிடித்தவர், மறுமையில் நபிமார்களுடனும், அவ்லியாக்களுடனும் இருப்பார். 13. பிறரின் தேவைகளை நிறைவேற்றும் பணியிலே ஈடுபட்டிருப்பவரின் தேவைகளை இறைவன் இம்மையிலும் மறுமையிலும் நிறைவேற்றி வைப்பான்.



14. எவர் தனது கப்ரில் தனக்குச் சாதகமாக இருக்கும் சாதனங்களை விரும்புகின்றாரோ, அவர் நடுநிசியில் விழித்தெழுந்து தொழுது கொள்ளட்டும். 15. எவர் மறுமையில் இறைவனின் அர்ஷின் நிழலில் இருக்க விரும்புகிறாரோ, அவர் உலகப்பற்றை உதறித் தள்ளட்டும் 16.எவர் தனது கேள்வி கணக்கு இலகுவாக இருக்க வேண்டுமென விரும்புகிறாரோ, அவர் தன் ஆன்மாவிற்கும், பிறருக்கும் நல்லுபதேசம் புரிந்து கொள்ளட்டும். 17. எவர் தம்மை மலக்குகள் தரிசிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அவர் விலக்கலானவைகளை விட்டும் பேணுதலாக இருந்து கொள்ளட்டும். 18. எவர் சொர்க்கத்தின் நடுவிலே இருக்க விரும்புகிறாரோ அவர் இரவிலும் பகலிலும் இறைவனைத் தியானம் செய்து கொள்ளட்டும்.

19. எவர் அல்லாஹ்விடம் அறிஞனாக இருக்க விரும்புகிறாரோ, அவர் பக்தி உள்ளவராக இருந்து கொள்ளட்டும். 20. எவர் நரகை விட்டும் சாந்தி அடைய விரும்புகிறாரோ, அவர் எவரையும் நல்லவைக் கொண்டல்லாது பேசாதிருக்கட்டும். 21. எவர் இகபரமிண்டிலும் இன்புற்று சீர்பெற்று இருக்க விரும்புகிறாரோ அவர் இம்மையைக் காண மறுமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். 22. எவர் "பிர்தவ்ஸ்" என்னும் சொர்க்கத்தின் சுகண்டியை அடைய வேண்டுமென்று ஆவற்படுகிறாரோ, அவர் தனது ஆயுட்காலத்தை அனாவசிய காரியங்களில் பாழாக்காதிருக்கட்டும். 23. எவர் தனது இதயம் பிரகாசமுள்ளதாக அமையவேண்டுமென்று எண்ணுகிறாரோ, அவர் சிருஷ்டிப் பொருளை சிந்தனை செய்து மெய்யுணர்வு பெறட்டும். 24. எவர் சொர்க்கத்தின் நடுவிலிருக்க விரும்புகிறாரோ, அவர் அனுதினமும் கலப்பற்ற முறையில் தஸ்பா செய்து கொள்ளட்டும் என்று தவ்ராத் வேதத்திலே கூறப் பட்டுள்ளது.

*– முனப்பஹாத்*

# 35. பற்பல பாவிகளுக்கு பலவிதமான வேதனைகள்

1. ஜக்காத், ஸதகா கொடாதவர்கள் மீது இறைவனின் கோபம் உண்டாகிறது. 2. ஜக்காத் கொடாதவர்கள், முதன் முதலில் நரகத்தில் புகுவார்கள். 3. ஜக்காத் கொடாதவர்களின் தொழுகை அங்கீகரிக்கப்படமாட்டாது. 4. ஜக்காத் கொடுப்பதை மறுப்பவர் நரகில் வெந்துருகுவார். 5. எவரின் பொருளிலே ஜக்காத்தின் தொகை சேர்ந்திருக்கிறதோ அவரின் அந்தப் பொருள் நாசமடையும். 6. ஜக்காத் கொடாதவர்கள் முஷ்ரிக்கா வார்கள். 7. விபசாரம் பெருகினால் காலரா உண்டாவது போல, ஜக்காத் கொடாததால் பஞ்சம் உண்டாகிறது. 8. ஜக்காத் கொடாதவரின் பொருள் சுத்தமடைவதில்லை. 9. ஜக்காத் கொடுப்பவரின் பொருள் பரிசுத்தமடைகிறது. 10. பொய் புகன்று, பொய் சத்தியம் செய்து வியாபாரம் செய்கிறவரின் வாயில் மறுமையில் கனல் பறக்கும் இரத்தம் வடியும். 11.பொய் சத்தியம் செய்வோரின் நாவை இழுத்துக்கட்டி தொங்கவிடப்படுவார்கள். அவர்களின் கழுத்துக்களில் பாம்புகள் பிடுங்கிக்கொண்டிருக்கும்.

12. திருடர்களின் ஒவ்வொரு அங்கமும் துண்டிக்கப் படும். மறுபடியும் சேர்க்கப்படும். பின்பும் துண்டிக்கப்படும். 13. கோள்சொல்வோரின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றப்படும். 14. எவர் பிறரின் நிலத்திலிருந்து அக்கிரமமாக ஒரு அங்குலம் பூமியையாயினும் அபகரித்துக் கொள்கிறாரோ அவரின் கழுத்திலே அந்தப் பூமியை வளையமாகப் போடப் படும். 15. இருமனைவி யுடையவர் அவ்விருவருக்கும் இடையில் நீதமாக நடந்து கொள்ளவில்லையானால், அவர் தனது ஒரு தோள் புஜம் இறங்கியவராக எழுப்பப்படுவார். 16.எவர் குர்ஆன் ஷரீபிற்கு தன் விருப்பப்படி வியாக்கியானம்



செய்கிறாரோ அவரின் வாய்க்கு நெருப்புக் கடிவாளம் போடப்படும். 17. எவர் பாலிலே தண்ணீர் கலக்குகிறாரோ அவரை அந்தப் பாலை விட்டும் தண்ணீரை நீக்கும்படித் துன்புறுத்தப்படும். 18. எவர் கிப்லாவின் பக்கம் எச்சில் துப்புகிறாரோ அந்த எச்சில் அவரின் முகத்திலேயே விழும். 19. எவர் தேவைக்கு அதிகமாக வீடுகட்டுகிறாரோ அந்த வீட்டைத் தன் முதுகின் மீது தூக்கிச் சுமக்கும்படி அவர் கஷ்டப்படுத்தப்படுவார். 20. எவர் உண்மைச் சட்டங்களை மறைத்து வைக்கிறாரோ அவருக்கு நெருப்புக் கடிவாளம் போடப்படும்.

21. அனாதைகளின் சொத்துக்களை அனுபவிப்பவரின் வாய், மூக்கு, காது, கண் முதலியவைகளில் புகை வெளிப்படும். அதைப் பார்த்து மற்றவர்கள் இவர்கள் அனாதைகளின் சொத்துக்களை உண்டவர்கள் என்று அறிந்து கொள்வார்கள். 22. எவர் அமானிதப் பொருட்களில் சதிமோசம் செய்கிறாரோ அவரிடம் அந்தப் பொருளைத் திருப்பிக் கொடுக்கும்படி கூறப்படும். அதற்கவர் அப்பொருள் களெல்லாம் உலகிலேயே நின்றுவிட்டன என்று கூறுவார். அப்போது அவரை நரகத்திற்கு அழைத்துப் போகும்படி மலக்குகளுக்கு உத்தரவிடப்படும். 23. எவர்கள் இறைவனைப் பயப்படாமல் ஜனங்களுக்குப் பயந்து மறைமுகமாக பாவமான காரியங்களில் ஈடுபடுகின்றனரோ அவர்களின் மேனியெல்லாம் மறுமையில் துர்நாற்றம் உள்ளதாக ஆகிவிடும். 24. குடிகாரர்கள் மாட்டின் பற்களைப் போன்ற பற்கள் உடையவர்களாக எழுப்பப்படுவார்கள். 25.பொறாமைக்காரர்கள், குள்ளநரியின் ரூபத்தில் எழுப்பப் படுவார்கள். 26. வட்டியின் பொருளை உண்பவர் மலைப்போன்று வயிறு பெருத்தவராக எழுப்பப்படுவார். 27.எவர் உலகில் இரு நாவு உடையவராக இருந்தாரோ, அவருக்கு மறுமையில் இரண்டு நெருப்பு நாவுகள் அமைக்கப்படும்.

*(முன்தஹல் மவாயிஜ்)*

# 36. நபி (ஸல்) அவர்கள் நரகில் கண்ட நங்கையர்கள்

ஹஜ்ரத்அலீ (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

ஒரு நாளன்று நானும் பாத்திமாவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகம் சென்றோம். அதுசமயம் அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். அதைக் கண்ணுற்ற பாத்திமா கண்கலங்கி, கலக்கமுற்று அருமைத்தந்தையே! தாங்கள் அழுது கொண்டிருக்கக் காரணம் யாது? என வினவினார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள், அருமை மகளே! நான் மிஃராஜ் சென்றிருந்த இரவிலே நரகில் வேதனைப்படும் பல நங்கையரைக் கண்டேன். அவர்கள் வேதனைப் படுவதற் குரிய காரணங்களையும் அறிவிக்கப்பட்டேன். அதனை நினைத்துத்தான் அழுது கொண்டிருக்கிறேன் என்று உரைத்தார்கள். அப்போது பாத்திமா (ரலி) அவர்கள் அருமைத் தந்தையே! அந்தப் பெண்கள் எவ்வாறு வேதனை செய்யப் படுகிறார்கள்? என்று கேட்க கீழ்க்கண்டவாறு கூறினார்கள்.

ஒரு பெண் அவளின் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கட்டித் தலைகீழாக தொங்கவிடப்பட்டிருக்கிறாள். கீழே எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் சூட்டால் அவளின் மூளை கொதித்து இளகி வடிந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பெண் அவளின் நாக்கை வெளியே இழுத்து அதனால் கட்டி தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு, அவளின் இருகைகளும் பின்புறமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அவளின் கொழுப்பு உருகி வாயின் வழியாக வடிந்து கொண்டிருக்கிறது. மற்றொரு பெண் அவளின் இரு மார்புகளும் முதுகின் பக்கம் இழுக்கப்பட்டு அதனால் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கிறாள். திருகு கள்ளியின் சாறு அவளின் வாயின் வழியே ஊற்றப்படுகிறது. இன்னொரு பெண் அவளின் இரு கைகளும் கால்களும் முன்நெற்றி ரோமத்தால் கட்டப்பட்டு



தொங்கவிடப்பட்டிருக்கிறாள். பெரும் பெரும் பாம்புகளும், தேள்களும் நட்டுவக்காலிகளும் அவளைப் பிடுங்கிக் கொண்டிருக்கின்றன.

இன்னொரு பெண் அவள் தன் சரீரத்தையே கடித்துத் தின்று கொண்டிருக்கிறாள். மற்றொரு பெண் அவளின் சரீரம் நெருப்புக் கத்தியால் துண்டிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இன்னொருவள் முகம் கன்னங்கரேரென்று கருத்திருக்கிறது. அவள் தன் குடலை உருவித் தின்று கொண்டிருக்கிறாள். இன்னும் ஒரு பெண் செவிடாகவும், குருடாகவும், ஊமையாகவும் நெருப்புப் பெட்டியில் போட்டுப் பூட்டப் பட்டிருக்கிறாள். அவளின் மூளை உருகி மூக்கின் வழியாக வடிந்து கொண்டிருக்கிறது. அவளின் மேனியெல்லாம் கருங் குஷ்டம் வெண்குஷ்டத்தால் பொத்து வடிந்து துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பெண் அவளின் தலை பன்றியின் தலைப்போன்றும், உடல் கழுதையின் உடல் போன்றும் இருக்கிறது. அவளின் மீது இலட்சோப லட்சம் வேதனைகள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பெண் நாயின் ரூபத்தில் இருக்கிறாள். அவளின் வாயின் வழியாகவும் முன்துவாரத்தின் வழியாகவும் பாம்புகளும் தேள்களும் உள்ளே நுழைந்து பின் துவாரத்தின் வழியாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன. மலக்குகள் நெருப்புச் சம்மட்டியால் அவளின் தலைமீது அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி முடித்த மாத்திரத்திலே, பாத்திமா (ரலி) பதை பதைத்து துடிதுடித்து என் அருமைத் தந்தையே! என் இரு கண்களின் குளிர்ச்சியே! அந்தப் பெண்மணிகள் செய்த கொடிய குற்றங்கள்தான் என்ன? என்பதை இந்த அடியாளுக்கும் அறிவிப்பீர்களாயின் அக்குற்றங்களை விட்டும் நீங்கியிருக்க ஏதுவாகும். ஆகையால் அறிவிப்பீர்களாக என்று வேண்டினார்கள். அதன்படி பெருமானார் (ஸல்) அவர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கிக் கூறினார்கள்.

என் அருமை மகளே! கூந்தலை இழுத்து தலைகீழாக கட்டி வேதனை செய்யப்படுகிறவள், தனது கூந்தலை அன்னிய ஆடவருக்கு முன் மறைக்காதவள். நாக்கை இழுத்து கட்டி வேதனை செய்யப்படுகிறவள், தன் கணவனை நாவால் திட்டித் துன்புறுத்தியவள் என்று கூறி அதற்கு விளக்கமாக, எவள் தன் கணவனை நாவால் துன்புறுத்துகிறாளோ, அவளின் நாக்கை மறுமையில் எழுபது முழ நீளம் வெளியே இழுத்து அவளின் கழுத்திலே சுற்றிக் கட்டப்படும். எவள் தனது கணவனை பார்த்து நான் உன்னிடம் ஒரு நலவையுங் கண்டதில்லை எனக் கூறுகிறாளோ, அவள் இரவெல்லாம் நின்று வணங்கினாலும், பகல் எல்லாம் நோன்பு நோற்றாலும், அவளது எழுபது வருடத்திய அமல்களை யெல்லாம் இறைவன் அழித்து விடுவான். எவள் தனது கணவனை நாவால் துன்பமடையச் செய்கிறாளோ, அவளை அல்லாஹ்வும் அவனது அமரர்களும் சபிக்கிறார்கள் என்று கூறினார்கள்.

தனது இரு மார்புகளையும் முதுகின் பக்கம் கட்டித் தொங்கவிடப்பட்டிருப்பவள், தனது கணவனின் அனுமதி இல்லாமல் அன்னிய குழந்தைகளுக்கு பால் கொடுத்தவள். தனது இருகைகளும் கால்களும் முன் நெற்றி ரோமத்தால் கட்டித் தொங்கவிடப்பட்டு பெரும் பெரும் பாம்புகளும், தேள்களும், நட்டுவக்காலிகளும் பிடுங்கப்பட்டுக் கொண்டிருப் பவள், தொழுகவும் நோன்பு நோற்கவும், சக்தியும் வசதியும் இருந்துங்கூட அவைகளை நிறைவேற்றாதவள். மேலும் பெருந்தொடக்கை நீக்க குளிக்காமலிருந்தவள். புருஷனின் உத்தரவின்றி வெளியில் சென்றவள். செவிடாகவும், குருடாகவும், ஊமையாகவும் இருப்பவள், விலக்கலான விஷயங்களைக் கேட்டும், அன்னிய ஆடவர்களைப் பார்த்தும், பொய் பேசிக் கொண்டுமிருந்தவள். பன்றியின் தலை போன்றும் கழுதையின் உடல் போன்றும் இருப்பவள், கோள்மூட்டுகிறவளாகவும் பொய் பேசுகிறவளாகவுமிருந்தாள். நெருப்புக் கத்தியால் சரீரம் துண்டிக்கப்பட்டுக் கொண்டிருப்



பவள், தன் சரீரத்தை அலங்கரித்து பிறருக்கு காட்டித் திரிந்தவள். தன் சரீரத்தைக் கடித்து தின்று கொண்டிருப்பவள், புறம் பேசித்திரிந்தவள். தன் முகம் கருத்து தன் குடலை உருவி தின்பவள் பிற பெண்களின் குற்றங் குறைகளை அறிந்து அவைகளை அம்பலப்படுத்தியவள். நாயின் ரூபத்திலுள்ளவள், குழப்பக்காரியாகவும், புருஷனிடம் கோபமாகப் பேசுகிறவளாகவும் இருந்தவள். மேலும் வேசியாகவும் இருந்தவள். *— துர்ரதுல் வாயிளீன்*

## 37. உணர்வூட்டும் ஒரு நிகழ்ச்சி

ஒரு நாளன்று ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுது கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமூகம் சென்றார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் ஏ உமரே! ஏன் அழுகிறீர் எனக் கேட்டார்கள். அதற்கவர் இறைத்தூதரே தலைவாசலிலே ஒரு வாலிபர் விம்மி விம்மி அழுது கொண்டிருக்கிறார். அவரின் அழுகை என்னையும் அழச் செய்து விட்டது என்றார்கள். உடனே அவ்வாலிபரை அழைத்து வாரும் என்று உத்திரவிட்டார்கள். அதன்படி அழைத்து வருகையில் அந்த வாலிபர் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார். அப்போது பெருமானார் அவர்கள் ஏ வாலிபரே! நீர் ஏன் அழுகிறீர்? காரணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவ்வாலிபர் நாயகமே! நான் செய்த பெரும்பாவம் என்னை அழ வைத்துவிட்டது. இறைவனின் தண்டனையை நினைத்து அழுகிறேன் என்றார். அப்போது நாயகம் அப்படி என்ன பெரும் பாவம் செய்தீர்? என்று இறைவனுக்கு இணைவைத்தீரா? அல்லது கொலை செய்தீரா என்று கேட்டார்கள்.

அதற்கு அவ்வாலிபர், அப்படி ஒன்றும் செய்யவில்லை யென்றார். அப்படியானால் உனது பாவம் ஏழு வானங்கள்,

ஏழு பூமிகள் நிறைய இருந்தாலும் இறைவன் மன்னித்து விடுவான் என்றார்கள். அப்பொழுது அவ்வாலிபர் நாயகமே! எனது பாவங்கள் ஏழு வானங்கள் பூமிகளைக் காணவும், மலைகளைக் காணவும் பெரியது என்றார். அதற்கு நாயகமவர்கள் ஏ வாலிபரே! உன் பாவம் பெரிதா? அல்லாஹ்வின் அர்ஷு பெரிதா? என்று கேட்க, என் பாவம்தான் பெரிது என்றார். மறுபடியும் உன்பாவம் பெரிதா? அல்லாஹ் பெரியவனா? எனக் கேட்க, அல்லாஹ்தான் பெரியவன் என்றார். அப்படியானால் உனது பாவம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அந்த வாலிபர் நாயகமே! அந்தப் பாவத்தைக்கூற நான் வெட்கப்படுகிறேன் என்றார். நீர் வெட்கப்படாமல் உமது பாவத்தை கூறத்தான் வேண்டும் என்றுரைத்தார்கள். அப்போது அந்த வாலிபர் நாயகமே! நான் ஏழு ஆண்டுகளாக அடக்கம் செய்யப்படும் (மையித்) பிரதேங்களின் ஆடைகளை திருடி விற்று அதன் மூலம் ஜீவித்து வந்தேன். ஒரு நாள் ஒரு அன்ஸாரியின் அழகிய மகள் ஒருத்தி இறந்து விட்டாள். அவளை அடக்கம் செய்து சென்ற பின் நான் அவளின் கப்ரைத் தோண்டி அவளது ஆடைகளை உரிந்து கொண்டிருக்கையில் எனக்கு காம இச்சை ஏற்பட்டு அவளைச் சேர்க்கையும் செய்துவிட்டேன். அப்போது அந்த பிரேதத்திலிருந்து ஏ மனிதனே! உனக்கு அல்லாஹ்வின் பயம் உண்டாகவில்லையா? என்னை இந்தப் பிரேதங்களுக் கிடையில் நிர்வாணமாக்கி விட்டாயே! பெருந்தொடக்குக் குள்ளாக்கிவிட்டாயே! என்று சப்தம் வந்தது. இது தான் நான் செய்த பெரும்பாவம் என்றார்.

இதைக்கேட்ட மாத்திரத்திலே நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கொதித்தெழுந்து ஏ வாலிபரே! இங்கிருந்து உடனே சென்று விடும் என்றுரைத்தார்கள். அப்போது அவ்வாலிபர் கதறிக் அழுதுகொண்டு காடு வனாந்திரங்களின் பக்கம் சென்று விட்டார். ஏழுநாள் வரை உண்ணவும், குடிக்கவும், உறங்கவும் செய்யாமல் அழுது புலம்பித் தன் பலத்தையெல்லாம் இழந்து சுஜூதில் விழுந்து, இறைவா! நான் உனது பாவியான அடியான், உன்னிடத்தில் மன்றாடுவதற்கு உன்தூதரிடம் சென்றேன். எனது பாவத்தை செவியேற்ற அவர்கள் என்னை துரத்தி விட்டார்கள். இப்போது உன்னைத் தவிர எனக்கு வேறு ஆதரவு கிடையாது. பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர்த்து வேறு யாருமில்லை. ஆதலால் என் பாவத்தினை மன்னித்துக் கருணை புரிவாயாக! இல்லையானால் ஒரு நெருப்பை அனுப்பி என்னைச் சுட்டுக் கரித்து சாம்பலாக்கி விடுவாயாக! என்று மனமுருகி மன்றாடி வேண்டினார்.



அப்போது ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் திருநபி (ஸல்) அவர்களிடம் வந்து இறைத்தூதரே! இறைவன் உங்களுக்கு ஸலாம் கூறுகிறான். மேலும் தனது அடியார்களிலிருந்து ஒரு அடியாரை உங்களிடம் அனுப்பினான். அவ்வடியாரின் பாவத்தை அவர் வெளிப்படுத்தியபோது நீங்கள் ஏன் புறக்கணித்து விரட்டினீர்கள்? என்றும் கேட்கிறான். மறுமையில் நீங்கள் பாவிகளுக்கு மன்றாடக் கூடியவர்கள் என்றும், அகில உலகமனைத்திற்கும் உங்களை அருளாகவே அனுப்பினான் என்றும் கூறுவதோடு, தான் அவ்வடியானை மன்னித்து விட்டதாகவும் கூறி மன்னிக்கக் கூடியவன் நானிருக்க நீங்கள் ஏன் அவ்வடியாருக்காக மன்றாடவில்லை எனவும் கேட்கிறான் என்றும் கூறினார்கள். இதைக் கேட்டமாத்திரத்திலே பெருமானார் (ஸல்) அவர்கள் உடனே அவ்வடியாரைத் தேடி அழைத்து வருமாறு ஸஹாபாக்களுக்கு உத்தரவிட்டார்கள். அதன்படி ஸஹாபாக்கள் அவ்வடியாரைத் தேடிக்கண்டுபிடித்து இறைவன் உங்களை மன்னித்து விட்டான் என்ற சுபச்செய்தியையும் கூறி நாயகத்திடம் அழைத்து வந்தார்கள். அதுசமயம் நாயகம் (ஸல்) அவர்கள் மஃரிப் தொழுகையை நடத்திக் கொண்டிருந்தார்கள். இவர்களும் தொழுகையில் சேர்ந்து கொண்டார்கள். நாயகமவர்கள்

அல்ஹாக்குமுத்தகாதுரு என்ற சூராவில் ஹத்தா ஜுர்த்துமுல் மகாபிர் என்பதை ஓதும்போது அவ்வாலிபர் "ஹாய்" எனச் சப்தமிட்டு அழுது கீழே விழுந்து விட்டார். தொழுதபின் வந்து பார்த்தபோது அவர் மரணித்துக் கிடந்தார்.

குறிப்பு: சிறு பாவங்களெல்லாம் தொழுகை முதலிய வணக்கங்களின் மூலம் அழிந்து விடுகின்றன. பெரும் பாவங்களெல்லாம் தவ்பா, இஸ்திஃபார் மூலம் மன்னிக்கப்படுகின்றன. எனவே பெரும் பாவத்திற்காளான இவரும் இஸ்திஃபார் செய்ததன் மூலம் மன்னிக்கப்பட்டார் என்பதை இச்சம்பவம் மூலம் அறிவிக்கப்படுகிறதல்லவா!

## 38. ஸூர் ஊதப்படும் நாளையிலே!

ஒரு நாளன்று ஹஜ்ரத் மஆத் பின் ஜபல் (ரலி) அவர்கள நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சந்நிதானம் சென்று இறைத்தூதரே! ஸூர் ஊதப்படும் நாளையிலே ஜனங்கள் பல கூட்டத்தினராக வருவார்கள் என்று இறைவன் கூறுகிறானே அதன் கருத்து என்ன? என்று விளக்கம் கேட்டபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் தாடி, ஆடைகள் எல்லாம் நனையும் வரை அழுது, ஏ மஆதே! நீர் மாபெரும் விஷயத்தைப் பற்றிக் கேட்டுவிட்டீர் என்று பகர்ந்து ஸூர் ஊதப்படும் நாளையிலே என் உம்மத்தோர்கள் பன்னிரண்டு கூட்டத்தினராக எழுப்பப்படுவார்கள் என்று கூறிக் கீழ்க் கண்டவாறு விளக்கினார்கள்.

1. ஒரு கூட்டத்தார் கை, கால்கள் இல்லாதவர்களாக எழுப்பப்படுவார்கள். அப்பொழுது இறைவனிடமிருந்து இவர்கள்தான் அண்டை வீட்டாரைத் துன்புறுத்தியவர்கள். இவர்களை நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். இவர்களுக்கு தண்டனை இதுதான் என்று ஒரு சப்தம் வரும்.



அதன்படி அவர்களை மலக்குகள் அழைத்துச் சென்று நரகில் தள்ளுவார்கள். 2. இன்னொரு கூட்டத்தினர் பன்றியின் சொருபத்தில் எழுப்பப்படுவார்கள். அப்போது இறைவனிடமிருந்து இவர்கள்தான் தொழுகையைத் தொழாதவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். இவர்களுக்குத் தண்டனை இதுதான் என்று சப்தம் வரும். அவ்வாறே அவர்களையும் மலக்குகள் அழைத்துச் சென்று நரகில் தள்ளுவார்கள். 3. மற்றொரு குழுவினர் மலை போன்று வயிறு பெருத்தவர்களாக எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் ஜக்காத் கொடாதவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுமாறு இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும்.

4. வாய்களில் இரத்தம் வடிந்தவர்களாக எழுப்பப்படுவார்கள். இவர்கள் புறம்பேசித் திரிந்தவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். 5. துர்நாற்றம் உடையவர்களாக எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் அல்லாஹ்வைப் பயப்படாமல் ஜனங்களைப் பயந்து மறைமுகமாகப் பல பாவச் செயல்களில் ஈடுபட்டவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் எனறு இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். 6. கழுத்து அறுபட்டவர்களாக எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் பொய் சத்தியம் செய்தவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். 7.வாய்களில் சீழ் சலம் வழிந்தவர்களாக எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் தெரிந்த விஷயத்திற்குச் சாட்சி சொல்ல மறுத்தவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். 8.தலைகீழாக எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் விபச்சாரம் புரிந்து பாவமன்னிப்பு தேடாமல் மரணித்தவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். 9. முகம்

கருத்தவர்களாகவும் நெருப்பால் வயிறு நிரப்பப்பட்டவர் களாகவும் எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் அனாதைகளின் சொத்துக்களை அநீதமாக உண்டவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். 10. குஷ்டரோகிகளாக எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் பெற்றோர்களைத் துன்புறுத்தியவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லுமாறு இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். 11.குருடராகவும், மாட்டின் கொம்பு போன்ற பற்களை உடைய வராகவும், நெஞ்சுவரை உதடு தொங்கியவர்களாகவும் எழுப்பப்படுவார்கள். இவர்கள்தான் மதுபானம் அருந்தி யவர்கள். இவர்களையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லும்படி இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். அதன்படியே மலக்குகள் அவர்களை அழைத்துச் சென்று நரகில் தள்ளுவார்கள். 12. பதிநாலாம் இரவின் பூரணச் சந்திரன் போன்று முகம் இலங்கியவர்களாக எழுப்பப்படுவார்கள். இவர்கள் ஐவேளைத் தொழுகைகளையும் பேணித் தொழுதவர்கள். மற்றும் பற்பல நல்ல அமல்கள் புரிந்தவர்கள். பாவங்களை விட்டும் நீங்கியவர்கள். பாவமன்னிப்புத் தேடியவர்கள். ஆதலால் இவர்களுக்குச் சொர்க்கமும், பிழை பொறுத்தலும் அருள்புரிதலுமே கூலியாகும். இவர்களை அழைத்துச் சென்று சொர்க்கத்தில் நுழையச் செய்யுங்கள் என்று இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். அவ்வாறே மலக்குகள் அழைத்துச் சென்று சொர்க்கத்தில் புகச்செய்வார்கள். *— துர்ரதுல் வாயிளீன்.*

## 39. உண்ணல், குடித்தலின் ஒழுக்கங்கள்

1. உண்பதற்கு முன்னும் பின்னும் கைகளைக் கழுவி வாயைக் கொப்பளிக்க வேண்டும். 2. உண்பதற்கு முன் "பிஸ்மில்லாஹி வஅலா பரக்கத்தில்லாஹி" எனக்கூறி ஆரம்பிக்க வேண்டும். 4. பாஸனில் (தட்டில்) தன் பக்கத்தில் உள்ளதைச் சாப்பிட வேண்டும். ஆனால் பாஸனில் பல உணவுப் பண்டங்களிருந்தால் தன் மனம் விரும்பும் பக்கத்திலிருந்து சாப்பிடலாம். 5. தஸ்தர்துணி விரித்து அதில் வைத்துச் சாப்பிட வேண்டும். 6. பாஸனில் நடுவிலிருந்து சாப்பிட ஆரம்பிக்கக்கூடாது. ஏனெனில் பாஸனின் நடுவில் ஆண்டவனின் பரக்கத் இறங்கிக் கொண்டிருக்கிறது. 7.சாப்பிட்டு முடிந்தபின் பாஸனை நன்றாக வழித்துச் சாப்பிட வேண்டும்; ஷைத்தானுக்கு எதையும் விட்டுவிடக்கூடாது. 8.சாப்பிட்டவுடன் கையை நன்றாக துப்பியபின் கழுவ வேண்டும். "எதில் பரக்கத்திருக்கிறது என்றறிய மாட்டீர்கள்" என்று ஹதீது ஷரீபில் வந்திருப்பதால் கைவிரல்களையும் பாஸனையும் நன்றாக வழித்துச் சாப்பிட வேண்டும். 9. கீழே விழுந்த ஆகாரத்தை எடுத்துச் சாப்பிட வேண்டும். அதில் ஏதாவது தூசி படிந்திருந்தால் சுத்தம் செய்து சாப்பிட வேண்டும். 10. மூன்று விரல்களால் சாப்பிட வேண்டும். 11.தலையணை முதலிய சாய்மானம் வைத்து சாய்ந்து கொண்டு பெருமையாக சாப்பிடக் கூடாது. 12. உணவைக் குறைகூறக்கூடாது. மனம் விரும்பினால் சாப்பிட வேண்டும். இன்றேல் சாப்பிடாமல் இருக்க வேண்டும். இறைவன் அளித்த பாக்கியத்தைக் குறைகூறக் கூடாது. 13. பலர் இருந்தால் எல்லோரும் சேர்ந்து சாப்பிட வேண்டும். 14. உட்காருவதில் சுன்னத்தான முறையைப் பேணி உட்கார வேண்டும். திருநபி (ஸல்) அவர்கள் குத்தவைத்து உட்கார்ந்தும், மண்டியிட்டும், ஒரு காலை படுக்க வைத்தும் அதன் மீது உட்கார்ந்தும் மறுகாலை நீட்டியும் உட்கார்ந்திருக்கிறார்கள். 15. இனிப்புப் பதார்த்தங்களையோ, பேரீத்தம் பழங்களையோ பலர் சேர்ந்து தின்று கொண்டிருக்கும் போது உடனிருப்போரின் அனுமதியின்றி ஒரு பொருளை இருமுறை தின்னலாகாது.

16. ஆரம்பத்தில் "பிஸ்மில்லாஹ்" சொல்ல மறந்து விட்டால் ஞாபகம் வரும்போது "பிஸ்மில்லாஹி பீ அவ்வலிஹீ வஆகிரிஹி" என்று சொல்லிக் கொள்ள வேண்டும். 17.பள்ளியினுள் இருந்துகொண்டு வெங்காயம் வெள்ளைப்பூண்டு முதலிய துர்வாடையுள்ள பொருட்களைத் தின்னக்கூடாது. வெளியில் தின்றிருந்தாலும் வாடை நீங்கும் வரை பள்ளியின் உள்ளே வரக்கூடாது. ஏனெனில் அவ்வாடையால் அங்கிருக்கும் அமரர்கள் (மலக்குகள்) நோவினைப்படுகிறார்கள். 18. சாப்பிட்டு முடிந்தவுடன் "அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வஸகானா வஜஅலனா மினல் முஸ்லிமீன்" என்று கூற வேண்டும். 19.சாப்பிட்டதும் தஸ்தர் துணி பாஸன் முதலியவற்றை எடுத்த பின் எழுந்திருக்க வேண்டும். 20. சூடான உணவுகளை உண்ணக்கூடாது.

21. உடன் சாப்பிடுகிறவர்களுக்கு முன் வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டால் முதலில் எழுந்திருக்கக்கூடாது. அவர் களுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டும். எழுந்து செல்லும் அவசியம் ஏற்பட்டு விட்டால் அவர்களிடம் அனுமதி பெற்று தாங்கள் சாப்பிடுங்கள்; நான் சாப்பிட்டு விட்டேன் என்று கூறி எழுந்து செல்லவேண்டும். 22. பால், தண்ணீர் அல்லது வேறு எதையேனும் குடிக்கும்போது முதலில் "பிஸ்மில்லாஹ்"வும் இறுதியில் "அல்ஹம்து லில்லாஹ்"வும் சொல்ல வேண்டும். 23. எதையும் குடிக்கும்போது ஒட்டகையைப் போன்று ஒரே மூச்சில் குடிக்காமல் இடையில் மூச்சு விட்டுக் குடிக்க வேண்டும். 24. குடிக்கும் தண்ணீர் முதலியவற்றில் மூச்சு விடுவதும் ஊதுவதும் கூடாது. 25.குடிக்கும் கிளாஸ் உடைந்திருந்தால் உடைந்த பக்கம் வாய் வைத்து குடிக்கக்கூடாது. 26. பால் குடித்த பின் வாயைக் கழுவிவிட்டு "அல்லாஹும்ம பாரிக்லனா பீஹி வஜித்னா மின்ஹு" என்று கூறவேண்டும்.

---



இவைகளெல்லாம் "மிஷ்காத்" என்னும் ஹதீஸ் கிரந்தத்திலே வரையப்பட்டிருக்கிறது.

## 40. நமது பிரார்த்தனை அங்கீகரிக்கப்படாததேன்?

ஒரு நாளன்று ஹஜ்ரத் இப்றாஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்களிடம் ஒரு குழுவினர் சென்று பெரியாரே! இறைவன் என்னை நீங்கள் அழையுங்கள்; உங்களுக்கு நான் பதில் தருகிறேன் என்று கூறுகிறான். அதற்கேற்ப நாங்கள் எங்களின் கஷ்டங்களைப் போக்க இறைவனைக் காலையிலும், மாலையிலும் அழைத்துப் பிரார்த்தனை செய்கிறோம். ஆனால் இறைவன் அதை ஏற்று எங்களுக்கு அருள் புரியவில்லையே யாது காரணம்? என வினவினார்கள். அப்போது இப்றாஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் ஜனங்களே! உங்களின் இருதயங்கள் பத்து வகைக் காரணங்களால் மரித்து விட்டன. அதாவது உங்களின் இருதயங்களிலிருக்கும் ஈமான் பத்து காரணங்களால் ஒளி மங்கிப் பலஹீனமடைந்திருக்கிறது. அத்தகைய இதயத்திலிருந்து எழும் பிரார்த்தனை இறைவனின் சமூகத்தில் ஏற்கப்படுவதில்லை எனக் கூறினார்கள். அக்காரணங்கள் பின்வருமாறு:—

1. நீங்கள் அல்லாஹ் ஒருவன்தான் என நம்பி விசுவாசங் கொண்டிருக்கிறீர்கள்; ஆனால் அவனால் விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றவில்லை.
2. நீங்கள் இறைவனால் இறக்கியருளப் பெற்ற திருக்குர்ஆனை ஓதுகிறீர்கள்; ஆனால் அதிலுள்ள போதனைப்படி நடக்கவில்லை.
3. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது அன்பு இருப்பதாக வாதிக்கிறீர்கள்; ஆனால் அவர்களின் சுன்னத் (நல்லவழியைப்) பின்பற்றாமல் நடக்கின்றீர்கள்.

4. ஷைத்தான் பகைவன் எனப்பகருகின்றீர்கள்; ஆனால் அவனையே பின்பற்றி நடக்கின்றீர்கள்.

5. சொர்க்கத்தை அடையவேண்டுமென்று ஆசைப் படுகின்றீர்கள்; ஆனால் அதை அடைவதற்குரிய நற்கிரியைகள் புரிவதில்லை.

6. நரகத்தைப் பயப்படுவதாகப் பகருகின்றீர்கள்; ஆனால் பாவமான செயல்களை விட்டும் நீங்கவில்லை.

7. மரணம் சம்பவிப்பது உண்மைதான் என்று கூறுகின்றீர்கள்; ஆனால் அது சம்பவிப்பதற்கு முன் நற்கிரியை புரிந்து தயாராகுவதில்லை.

8. மற்றவர்களின் குற்றங்குறைகளைத் தேடித் திரிகின்றீர்கள்; ஆனால் உங்களிலிருக்கும் குற்றங்குறை களைச் சிந்தித்துணருவதில்லை.

9. இறைவனால் அளிக்கப்படும் ஆகாரங்களை உண்கிறீர்கள்; ஆனால் அவனுக்கு நன்றி செலுத்து வதில்லை.

10. உங்களில் மரணித்தோரை அடக்கம் செய்கின்றீர்கள்; ஆனால் நீங்களும் மரணிப்பீர்கள் என்ற எண்ணமும் படிப்பினையும் ஏற்படுவதில்லை.

* * *